விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 02 சனிக்கிழமை (18.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 304

# இலங்கையில் அரசியல் தீர்வை ஏற்படுத்த இந்தியா தனது சக்தியை பயன்படுத்தும்

## இந்.வெளிவிவகார அமைச்சு அறிக்கை

(புதுடில்லி)

ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் ஒவ்வொரு சமூகமும் தனது அடையாளத்தை உணரக் கூடிய வகையில் பேச்சுவார்த்தை மூலமான ஒரு சமாதானத் தீர்வு இலங்கையில் ஏற்படுவதற்கு இந்தியா தனது சக்திக் குட்பட்ட அனைத்தையும் செய்யும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## சீரற்ற காலநிலையினால் இடம்பெயர்ந்த மக்கள் பாதிப்பு

### இராணுவப் பேச்சாளர் கவலை

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் தொடர் மோதல் சம்பவங்கள் காரணமாக 95 வீதமான தமிழ் மக்கள் யுத்த சூனியப் பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் முல்லைத்தீவு, பூநகரி, விசுவமடு மற்றும் ஒட்டிசுட்டான் ஆகிய பிரதேசங்களிலேயே தங்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்ததை அடுத்து கடல் மார்க்கமாக நூற்றுக்கும் அதிகமான பொதுமக்கள் பாதுகாப்பு பிரிவினரிடம் தஞ்சமடைந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இது தொடர் (12ஆம் பக்கம் பார்க்க)

## உணவு லொறிகள் வன்னிக்குச் சென்றன

(வவுனியா)


ஐக்கிய நாடுகளின் உணவுப் பொருட்கள் ஏற்றிய 50 லொறிகள் வவுனியாவிலிருந்து வன்னிப் பிரதேசத்திற்கு நேற்று மீண்டும் பயணத்தை ஆரம்பித்துள்ளன.

ஏ-9 வீதியில் இராணுவத்தினர் மற்றும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் வலுவடைந்திருந்ததால், நேற்று முன்தினம் வன்னிக்குப் புறப்பட்டுச் சென்ற உணவுப் பொருட்கள் ஏற்றிய லொறிகளை மீண்டும் வவுனியாவுக்கு திருப்ப நேர்ந்ததாக ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான பேச்சாளர் கோர்டன் வேய்ஸ் தெரிவித்தார்.

வன்னிக்கு மீண்டும் உணவுப் பொருள்களை எடுத்துச் (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்க அரசாங்கம் திடசங்கற்பம்

### புலிகளுக்கு அல்ல என்கிறார் ஜனாதிபதி



(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்றை வழங்க அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது.

ஆனால் இந்தத் தீர்வு விடுதலைப் புலிகளுக்கு அல்ல. அவர்களுடைய இலக்கு வித்தியாசமானது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஹிந்துப் பத்திரிகைக்கு வழங்கிய தொலைபேசி மூலமான பேட்டியிலே யே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளதாவது, வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்க (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி –ரணில் விக்கிரமசிங்க விரைவில் சந்திப்பதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

அரசியலமைப்புச் சபையை உருவாக்குவது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவுடன் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்திருப்பதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியலமைப்புக்கான நியமனம் குறித்து பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் கலந்துரையாடி தீர்மானமொன்றை எடுக்கவேண்டும் எனவும், (12ஆம் பக்கம் பார்க்க)

## தி.மு.க. எம்.பிக்கள் கூண்டோடு இராஜினாமா

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக, தி.மு.க. எம்.பிக்கள் மேலும் 17பேர் தங்களின் பதவிகளை ராஜினாமா செய்து, முதல்வர் கருணாநிதியிடம் கடிதம் கொடுத்துள்ளனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக கடந்த 14ஆம் திகதி,' முதல்வர் கருணாநிதி தலைமையில் சென்னையில் அனைத்துக் கட்சி கூட்டம் நடந்தது.

இந்தக் கூட்டத்தில், இலங்கை அரசை மத்திய அரசு நிர்ப்பந்தித்து, 14 நாட்களுக்குள் போர் நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அப்படி செய்யவில்லை எனில், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து எம்.பிக்களும் தங்களின் (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் அழுத்தங்களுக்கு எதிராக போராடுவதற்கு ஐ.தே.கட்சி அழைப்பு

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தினால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களுக்கு எதிராகப் போராட அரசாங்கத்துக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியைக் கைப்பற்ற படையினர் மேற்கொள்ளும் முயற்சிகளை தடுக்கும் வகையில், தமிழக அரசியல் கட்சிகள் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக, கட்சி,இன, மதபேதமின்றி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பல்வேறு அரசியல் முரண்பாடுகள் காணப்படும் நிலையில் இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்வது நியாயமற்றது என அரசாங்க அனுசரணையில் வெளியாகும் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அப்பாவித் தமிழ் மக்களை காப்பாற்றுவதற்கான ஒரே வழி கிளிநொச்சியைக் கைப்பற்றுவதே என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்கவேண்டுமெனலக்ஸ்மன்செனவிரத்ன குறிப்பிட்டுள்ள கருத்து தனிப்பட்ட கருத்து எனவும் அது (12ஆம் பக்கம் பார்க்க)

## நாளைய வலம்புரியில்

பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை
எழுதிய
'யாழ்ப்பாண
மாவட்ட நிர்வாக
வரலாறு'

# இலங்கை அரசாங்கத்துக்கு ஜெயலலிதா ஆதரவளிக்கிறார்

## கருணாநிதி குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கை விவகாரத்தில் முன்னாள் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சிங்கள அரசுக்கு ஆதரவாக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூத்த ஆலோசகர் கருத்து தெரிவித்துள்ளதாக முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள கேள்வி-பதில் அறிக்கை வருமாறு,

**கேள்வி:** இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தமிழக அரசு கூட்டிய அனைத் துக்கட்சிக் கூட்டத்துக்கு வைகோ வராவிட்டாலும், அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அறிவிக்கப் பட்ட தீர்மானத்தை அவரும் ஏற்று கொண்டுள்ள காரணத்தினால் தானே அவரது கட்சி எம்.பி.க்களும் பதவி விலகத் தயார் என்று கூறியிருக்கிறார்.

**பதில்:** ஆம், அவர் அனைத்துக்கட்சி கூட்டத்துக்கு வராவிட்டாலும் தனது உணர்வை வெளிபடுத்தியிருப்பதைப் படிக்கும் போது நமக்குப் புல்லரிக்கிறது.

வரவேற்கதக்க அறிவிப்பு. ஆனாலும் ஒன்று, தி.மு.கவினர் மத்திய அமைச்சர்கள் பதவியிலிருந்தும் விலக வேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார்.

எம்.பி.பதவியிலிருந்து விலகினாலே அமைச்சர் பதவியும் தானாகவே போய் விடும் என்பது அவருக்குத் தெரியாதா என்ன?

**கேள்வி:** அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர்களுக்காக நாம் எடுத்த முடிபு கண்டு அங்கம் எல்லாம் பதற அம்மையார் ஜெயலலிதா விடுத்துள்ள அனல்கக்கும் அறிக்கையில் இலங்கையில் தற்போது நடக்கும் யுத்தம் விடுதலைப்புலிகள் என்னும் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்துக்கெதிரான யுத்தம்.

இந்த யுத்தத்தில் அங்கு வசிக்கும் அப்பாவித் தமிழர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல விடாமல் விடுதலைப்புலிகள் அமைப்பு அவர்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவதாகச் செய்திகள் கூறுகின்றன என்று குறிப்பிட்டிருக்கின்றாரே?

**பதில்:** அம்மையாரின் இந்த அறிக்கையை வை.கோ. ஏற்றுக் கொள்கின்றாரா?

**கேள்வி:** மக்களவை உறுப்பினர்கள் பதவி விலகுவார்கள் என்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத் தீர்மானத்தில் சொல்லப் பட்டிருக்கிறதேதவிர, மத்திய அமைச்சர்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட அதில் இல்லை என்று ஜெயலலிதா அறிக்கையிலே சொல்லியிருக்கிறாரே?

**பதில்:** அம்மையார் முதலில் அந்தத் தீர்மானத்தை மீண்டும் மீண்டும் படித்து தெளிவு பெற வேண்டுகிறேன்.

தீர்மானங்கள் செயல் வடிவம் பெறவும், இலங்கையில் 2வார காலத்திற்குள் போர் நிறுத்தம் செய்யவும் இந்திய அரசு முன் வராவிட்டால், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலக நேரிடும் என்றுதான் தீர்மான வாசகம் இருக்கிறதே தவிர, மக்களவை உறுப்பினர்கள் என்று இல்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதில் மாநிலங்களவை உறுப்பினர்களும், மத்திய அமைச்சர்களும் அடங்குவார்கள் என்பதை நான் சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்றில்லை.

மாநிலங்களவை உறுப்பினர்க்கும் அத் தீர்மானம் பொருந்தும் என்பதால் தானே, திருமதி கனிமொழி 29.10.2008 தேதியிட்டு தனது பதவி விலகல் கடிதத்தை இன்னும் இரண்டு வாரக்காலக் கெடு இருந்தபோதிலும் முன் கூட்டியே அனுப்பியிருக்கிறார்.

**கேள்வி:** உண்மையிலேயே கனிமொழிக்குஇலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை இருக்குமானால், ராஜ்ய சபா தலைவரிடம்தன் ராஜினாமா கடிதத்தை இன்றைய தேதியிட்டுக் கொடுத்திருக்க வேண்டும் என்கிறாரே ஜெயலலிதா?

**பதில்:** அனைத்துக் கட்சித் தலைவர்கள் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு உரிய விளைவு ஏற்பட, அந்தக் கூட்டத்திலேயே, அந்தத் தீர்மானத்திலேயே இரண்டு வாரங்கள் காலக் கேடு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் ஜெயலலிதா காலகேடுவைப் பற்றிக் கவலைப்படாமல் ராஜினாமா கடிதத்தை உடனடியாக மாநிலங்கள் அவை தலைவரிடம் கனிமொழி ஏன் கொடுக்கவில்லை என்று கேட்கிறார்.

ஜெயலலிதாவின் அவசரத்திற்குக் காரணம் இலங்கைத் தமிழர் பிரச்சினையின் மீதுள்ள அக்கறை அல்ல, கனிமொழி எப்படியாவது மாநிலங்கள் அவை உறுப்பினர் பதவியிலிருந்து இந்தக் காரணத்தையொட்டி வெளியே வந்துவிட மாட்டாரா என்று நல்லெண்ணம் தான் காரணம்.

**கேள்வி:** ஜெயயலலிதாவின் அறிக்கையை யாராவது பாராட்டுவார்களா?

**பதில்:** ஏன் பாராட்ட மாட்டார்கள்? இதோ, இன்று (நேற்று முன்தினம்) வெளிவந்துள்ள இந்துஸ்தான் ரைம்ஸ் ஆங்கிலப் பத்திரிகையில் ஜெயலலிதா நம்முடைய தீர்மானத்திற்குப் பதிலாக வெளியிட்ட மறுப்பறிக்கையைப் பாராட்டி, இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷவின் மூத்த ஆலோசகர் பசில் ராஜபக்ஷ என்பவர் கொடுத்த பேட்டி வெளிவந்துள்ளது. அதில் அவர் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

நிலைமையை நாங்கள் கவனித்து வருகிறோம். இந்திய அரசு ஏதாவது அறிக்கை வெளியிடுகிறதா என்பதை நாங்கள் பார்ப்போம். அது மாத்திரமல்ல, கருணாநிதிக்கு எதிராக ஜெயலலிதா பேசியிருப்பதை ஞாபகத்திலே வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த அளவிற்கு சிங்கள அரசுக்கு ஆதரவாக ஜெயலலிதா இருப்பதை ஒத்துக் கொண்டு சொல்லியிருப்பதைப் படிக்கும் போது, தமிழா! இப்போதாவது புரிகிறதா? உண்மையில் காட்டிக் கொடுக்கின்ற கபட நாடகம் போடுவது யார் என்று? இவ்வாறு கருணாநிதி கூறியுள்ளார். (ச)



மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர் களை கௌரவிக்கும் நிகழ்வில் தேசியரீதி யில் தமிழ் மொழியில் முதலிடம் பெற்ற மாணவன் த.பாசுபதன் மற்றும் ஆசிரியை திருமதி ஆதிரை சர்வேந்திரன் ஆகியோருக்கு சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ப.வே. இராசரத்தினம் கேடயம் வழங்கி கௌரவிப்பதைப் படங்களில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் கு.சிவானந்தனும் காணப்படுகிறார். (படங்கள் :- சாவகச்சேரி செய்தியாளர்)

## வலய மட்டத்தில் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவினரால் மாற்று ஆற்றலுள்ளோர்தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் போட்டிகள் இம்முறையும் கோட்ட, வலய மட்டங்களில் நடத்தப்படவுள்ளன.

விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் பேச்சு, கவிதை, கட்டுரை, தனியிசை, தனி நடனம், குழு இசை, குழு நடனம் என்பனவும் திறந்த போட்டிகளாக நாடகம், நாட்டிய நாடகம், வில்லுப்பாட்டு என்பனவும் நடைபெறவுள்ளன.

சங்கானை ,தெல்லிப்பழைக் கோட்ட மட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமையும் உடுவில் கோட்டப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமையும் சண்டிலிப்பாய் கோட்ட மட்டப்போட்டிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது என வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

## நயினாதீவு நாகபூசணி ஆலயத்தில் நாளை இலவச வைத்திய முகாம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் அறங்காவலர் சபையினரால் தீவக மக்களின் நன்மை கருதி ஒழுங்கு செய்யப்பட்ட இலவச வைத்தியசேவை நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1மணிவரை அம்மன் கோவிலில் நடைபெறும்.

பங்கு பற்ற விரும்பும் நோயாளிகள் உரிய நேரத்தில் கலந்து கொள்ளுமாறு அறங்காவலர் சபை கேட்டுள்ளது.

இவ்வைத்திய சேவையின் போது இருதயம், பொது, குழந்தை வைத்தியம், சத்திரசிகிச்சை, தோல் வைத்தியம், கண், காது, மூக்கு, தொண்டை, பல் ஆகியவற்றிற்கான துறைசார்ந்த வைத்திய நிபுணர்கள் பங்குபற்றுகின்றனர்.

இவ் வைத்திய சேவையில் இரத்தம், சலம், பரிசோதனை, ஈ.சி.ஜி. (ECG) பற்சிகிச்சை, கண் சிகிச்சை ஏனைய ஆய்வுகூடப் பரிசோதனைகள் என்பன இடம் பெறும். (ச)

## கொள்ளைச் சந்தேக நபர்கள் மூவருக்கு விளக்கமறியல்

கொள்ளையிடுவதற்காக பற்றைக்குள் பதுங்கியிருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்ட மூவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

வதிரிப்பகுதியில் கடந்த 15ஆம் திகதி மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளை மூவர் அப்பகுதியிலுள்ள பற்றைக்குள் பதுங்கியிருந்துள்ளனர். இவர்களை பொதுமக்கள் கண்டவுடன் அவர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

அவர்கள் இருந்த இடத்திலிருந்து கறுப்பு உடைகள், அசிட் போத்தல்கள், சப்பாத்துக்கள், கையடக்கத் தொலைபேசி என்பவற்றை பொதுமக்கள் மீட்டதுடன் அதுகுறித்து நெல்லியடிப் பொலிஸாருக்கும் தகவல் தெரிவித்ததுடன் மறுநாள் அவர்களைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்கள் மூவரும் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் மேலதிக நீதிபதி எ.ஜி.அலெக்ஸ் ராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது சந்தேகநபர்கள் மூவரையும் எதிர்வரும் 22ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச-52)

## நேர்முகப் பரீட்சைக் கடிதங்களின் தாமதத்தால் விண்ணப்பதாரிகள் பாதிப்பு

துணை மருத்துவப்பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

துணை மருத்துவ பயிற்சி நெறிகளுக்கென ஆட்சேர்ப்புச் செய்வதற்கென சுகாதார அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு யாழ்.மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் நேற்று முன்தினமே கிடைத்துள்ளது.

ஆனால் அதற்கான நேர்முகப்பரீட்சை கடந்த 13 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார பணிமனையுடன் தொடர்பு கொண்ட போது, எதிர்வரும் 22ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு தோன்றுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

தற்போது பயண அனுமதி பெறுவதில் உள்ள காலதாமதங்களின் மத்தியில் கொழும்பு செல்வதற்கு விண்ணப்பித்தவர்களினால் இயலாமல் உள்ளதாகவும் இதனால் உரியமாற்று ஒழுங்குகளை ஏற்படுத்தித் தருமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (எ)

### வேலணைப் பிரதேச முதியோர், சிறுவர் தினவிழா

வேலணை பிரதேச செயலக சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பு.ஆ.இராதாகிருஷ்ணன், கரிதாஸ்-கியுடெக் நிறுவன சிறுவர் திட்ட முகாமையாளர் கே.அஜந்தன், வேலணை பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ச)

### தொலைந்து விட்டது

இந்திராபுரம் முகமாலை, எழுதுமட்டுவாள் என்ற முகவரியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை மகேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (557003304 V) வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கும் புத்தூர் சந்திக்கும் இடையில் தொலைந்து விட்டது.

கண்டெடுத்தவர்கள் மின்சார நிலைய வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (1856)

## இன்று ஒரு தகவல்

# தர்மமும் கர்வமும்

தர்மம் தலைகாக்கும்! என்று சொல்வார்கள். ஒருவர் செய்யும் தர்மம் அவர் தலைமுறையையே காப்பாற்றும். ஒரு பத்துகாசை ஒருவருக்குக் கொடுத்துவிட்டு ஊர்முழுவதும் அதைச் சொல்லிக்கொண்டிருப்பதற்குப் பெயர் தர்மம் இல்லை! விளம்பரம்!

ஒருவர் பசிக்கிறது என்று சொல்லிக் கொண்டுவருகிறார்; நாம் அவரைக் கூப்பிட்டு உட்கார வைத்து உணவு கொடுக்கிறோம் என்றால் அவருடைய பசி தீர வேண்டும் என்பதுதான் நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

அவருடன் நாமும் உட்கார்ந்து சாப்பிட்டு அதை போட்டோ பிடித்து விளம்பரப்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட்டால் அதன் நோக்கம் வேறென்று தான் அர்த்தம்.

தர்மம் செய்பவர்களுக்கு கர்வம் இருக்கக்கூடாது என்ற கருத்தை புராணங்களே வலியுறுத்தியிருக்கின்றன. தருமரைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவர் ஏழை எளியவர்கள் மேல் இரக்கம் கொண்டவர். தாராளமாக தர்மம் செய்பவர். அப்படிப்பட்ட தர்மபுத்திரருக்கே ஒரு சமயம் ஈகை குணத்தைப் பற்றி லேசான கர்வம் உண்டாகியது. இதைப் புரிந்து கொண்ட பகவான் ஸ்ரீகிருஷ்ணர், இவரை இப்படியே விட்டு விடக்கூடாது. கொஞ்சம் திருத்தி நல்வழிப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தார்.

ஒருநாள் வெளியில் போய்விட்டு வரலாம் என்று தருமரைக் கூட்டிக் கொண்டு புறப்பட்டார் ஸ்ரீகிருஷ்ணர். இருவரும் அப்படியே பாதாள லோகத்துக்குப் போனார்கள். அந்த சமயம் பாதாளலோகத்தில் மகாபலிச்சக்கர வர்த்தி ஆட்சி செய்து கொண்டிருந்தார்.

மகாபலி தானதர்மம் செய்வதில் சிறந்தவர். அவரிடம் இருந்த விருந்தோம்பும் பண்பை உலகம் முழுவதும் பாராட்டிக்கொண்டிருந்தது. அந்த நேரத்தில் ஸ்ரீகிருஷ்ணரும் தருமரும் பாதாளலோகத்தில் உள்ள வீதி வழியே போய்க் கொண் டிருந்தனர். தருமர் ஒரு வீட்டுக்குப் போய், குடிப்பதற்கு தண்ணீர் கேட்டார். அந்த வீட்டுக்கார அம்மா ஒரு தங்க கிண்ணத்தில் தண்ணீரை கொண்டுவந்து கொடுத்தார்.

குடித்துவிட்டு வெறும் கிண்ணத்தை திருப்பிக் கொடுத்தார். அந்த அம்மா அதை திருப்பி வாங்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார். "ஐயா எங்கள் நாட்டில் ஒரு தடவை கொடுப்பதை வாங்கும் பழக்கம் இல்லை. அது மட்டுமல்ல, ஒரு தடவை உபயோகப்படுத்திய பொருள் தங்கமாக இருந்தாலும் அதைத் தூக்கி ஏறிந்து விடுவோம்!" என்றார்.

தருமருக்கோ ஆச்சரியம்! அந்நாட்டு மக்களின் செல்வச் செழிப்பைப் புரிந்து கொண்டார். அதன் பின்னர் தருமரும் ஸ்ரீகிருஷ்ணரும் புறப்பட்டு நேராக மகாபலி ராஜாவின் அரண்மனைக்குப் போனார்கள். ராஜாவிடம் தருமரை அறிமுகப்படுத்தினார் ஸ்ரீகிருஷ்ணர்.

"அரசே இன்று தருமபுத்திரரை தங்கள் இராஜ்ஜியத்திற்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். இவர் தான தர்மம் செய்வதில் மிகவும் புகழ் பெற்றவர். ஒரு நாளைக்கு 500 பேருக்கு அன்னதானம் செய்கிறார்" என்றார். இதைக்கேட்டவுடன் மகாபலி தனது இரண்டு காதையும் பொத்திக் கொண்டார்.

"நீங்கள் சொல்லும் செய்தி என்காதில் விழ வேண்டாம். அப்படிப்பட்ட ஒருவரைப் பற்றித் தெரிந்துகொள்ள நான் தயாராக இல்லை. என் இராஜ்ஜியத்தில் தானம் வாங்குவதற்கே யாரும் இல்லை.

ஆனால் நீங்களோ தருமர் தினமும் 500 பேருக்கு அன்னதானம் வழங்குவதாக சொல்கிறீர்கள். அப்படியென்றால் அவருடைய இராஜ்ஜியத்தில் 500 ஏழைகள் இருப்பதாக அர்த்தம். அதிலிருந்தே அவரது ஆட்சி எப்ப டிப்பட்டது என்பதை புரிந்து கொண்டேன். அப்படிப்பட்ட ஒருவரைப் பற்றி தெரிந்துகொள்ள நான் தயாராக இல்லை." என்று சொல்லி விட்டார் மகாபலிச் சக்கரவர்த்தி. அதைக் கேட்டதும் தருமர் வெட்கித்தலை குனிந்தார். அவரது கர்வமும் நீங்கியது.

ஒரு பெரியவருக்கு ஐந்து பிள்ளைகள்! அவர்கள் ஐவருக்கும் பஞ்ச பாண்டவர் என்று பெயரை வைத்தார். அவர்கள் போலவே வாழ வேண்டும் என்பதற்காக!

பல நாள் கழித்து, அந்த பெரியவரை கடைத்தெருவில் பார்த்து ஒருவர் கேட்டார்: "என்ன பெரியவரே உங்கள் பிள்ளைகளெல்லாம் இப்பொழுது எப்படி இருக்கிறார்கள்?" என்றார். "பெயருக்குத் தகுந்த மாதிரியே இருக்கிறார்கள்!" என்றார் பெரியவர். அப்படியா?" என்றார் அவர்

"ஆமாம்! சொத்து முழுவதையும் சூதாட்டத்திலேயே விட்டுவிட்டார்கள்!" என்றார் பெரியவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பொதுத் தேர்தல் நடாத்துவது தான் ஏமாற்று அரசை இல்லாதொழிக்க வழி

## காலம் நெருங்கிவிட்டது என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க



(கொழும்பு)

அரச சொத்துக்கள் அரசாங்கத்தாலேயே கொள்ளையடிக்கப்படுகின்றன. அரச சேவைகள் செயலற்றுக் கிடக்கின்றன. நாளுக்கு நாள் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து செல்கிறது.

இந்நிலை நீடித்தால் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்கள் பொது மக்களே என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநா க்க எம்.பி. தெரிவித்தார். எரிபொருள் இறக்குமதியிலும் விற்பனையிலும் அரசாங்கம் முழு நாட்டையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது. பொது மக்களை ஏமாற்றும் அரசாங்கத்தை விரட்டியடிக்க பொதுத் தேர்தலே ஒரே வழி என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ரயில்வே தொழிற்சங்க 15 ஆவது உறுப்பினர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் பேசுகையில், உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை ஒரு பெரல் 77 அமெரிக்க டொலர்களாக குறைவடைந்துள்ளது.

கடந்த வாரங்களில் உலக சந்தையில் எரிபொருளின் விலை படிப்படியாக குறைவடைந்து வருகின்றமை உலகறிந்த விடயம்.

இந்நிலையில் உள்நாட்டில் எரிபொருளின் விலை குறைக்கப்படாதிருப்பது வியப்பளிக்கின்றது. எரிபொருள் விலையை குறைத்து பொது மக்களின் சுமையை குறைக்குமாறு நாம் அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருகிறோம்.

அதுமட்டுமல்லாமல் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. ஆனால் அரசாங்கம் அது பற்றி சிந்திப்பதாக இல்லை.

எரிபொருள் விலையை குறைப்பதில் அரசாங்கம் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்காதி ருக்கின்ற அதேவேளை 77 டொல ருக்கு கொள் வனவு செய்கின்ற எரி பொருளை 126 டொலருக்கு கொள் வனவு செய்வதாக நாட்டு மக்களுக்கு கூறுகிறது.

இதன்மூலம் அரசாங்கம் எரிபொருள் விடயத்தில் பொதுமக்களின் பணத்தை கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகின்றது.

எருபொருளில் மட்டுமல்லாது ஏனைய அரச சொத்துக் களும் அரச அங்கத்தவராலேயே கொள்ளையிடப்படுகின்றன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் சொத்துக்களையும் பொதுமக்களையும் சூறையாடுகின்ற அரசாங்கமாக உருவாகியிருக்கின்றது.

அரசாங்கத்தின் பிழையான நடவடிக்கைகள் இந்நாட்டின் பொருளாதாரத்தை அதல பாதாளத்துக்கு இட்டுச் செல்கின்றன. பணவீக்கத்தால் மக்கள் மீளமுடியாதிருக்கின்றனர்.

இந் நிலை நீடிக்குமானால் எமது நாட்டின் எதிர்காலம் பல்வேறு சவால்கள் நிறைந்ததாக மாற்றமடைந்து விடும். இதன் முழுப்பொறுப்பும் கொள்கையற்ற கூட்டமைப்பு அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் பயனாகும்.

கொள்ளையர்களும் ஏமாற்றுப் பேர்வழிகளும் நிறைந்திருக்கின்ற இன்றைய அரசாங்கத்தை விரட்டியடிப்பதற்கு ஒரே வழி பொதுத் தேர்தலேயாகும். இன்னும் இரண்டு அல்ல மூன்று மாதங்களில் அதற்கான தேவையும் ஏற்படப்போகின்றது என்றார். ஓ

# புலிகளை பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலில் சேர்க்க ஐ.நா நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

## அவுஸ்திரேலியாவில் அமைச்சர் ரோஹித போகொல்லாகம

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையின் இறைமை மற்றும் ஆட்புல ஒருமைக்கு மாத்திரம் அல்லாது மேற்கு நாடுகளில் சட்டம், ஒழுங்கு நிலை மற்றும் உறுதித் தன்மைக்கும் அச்சுறுத்தலாக உள்ளது என வெளி விவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.


எனவே, விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத பட்டியலில் சேர்க்க ஐ.நா. செயற்குழு நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அவுஸ்திரேலியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நேற்று முன்தினம் கான்பெராவில் உள்ள மூலோபாய கற்கைக்கான அவுஸ்திரேலிய நிலையத்தில் நடைபெற்ற கலந்து ரையாடலில் உரையாற்றும் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் போகொல்லாகம மேலும் கூறியதாவது, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு நாட்டின் உயர் தலைவர்களையும் படையினரையும் மாத்திரம் இலக்கு வைப்பதில்லை.

பெண்கள், குழந்தைகள், உள்ளிட்ட சாதாரண பொது மக்களையும் நேரடியாக இலக்கு வைத்து மோசமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

தொண்டு நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், கலாசார நிறுவனங்கள் ஊடாக சர்வதேச ரீதியில் பல்வேறு நாடுகளிலும் நிதி சேகரிக்கும் நடவடிக்கையையும் பிரசார செயற்பாட்டையும் புலிகள் மேற்கொண்டுவருகின்றனர். இந் நிதியை அரசாங்கத்திற்கு எதிரான யுத்தத்தை நடத்துவதற்கும் பயங்கரவாத தாக்குதல்களை மேற்கொள்வதற்கும் பயன்படுத்துகின்றனர்.



விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையின் இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டிற்கு மாத்திரம் ஆபத்தானவர்கள் அல்ல. மாறாக மேற்கு நாடுகளில் சட்டம், ஒழுங்கு மற்றும் உறுதித் தன்மைக்கும் அவர்கள் அச்சுறுத்தலாக உள்ளனர்.

எனவே, விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்க்க ஐ.நா. செயற்குழு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஓ

## இராசி பலன்

*18.10.2008*
*(ஐப்பசி 02, சனிக்கிழமை)*
*சதுர்த்தி முன்னிரவு 6.04 மணிவரை*
*ரோகினி பின்னிரவு 1.05 மணிவரை*
*இராகுகாலம் 9.02-10.32மணிவரை*
*சுபநேரம்3.02 -4.32மணிவரை*
*சங்கடஹர சதுர்த்தி*

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம், எடுத்த காரியம் தாமதமாகும். |
| இடபம் | நற்கீர்த்தி, மனோதைரியம், காரிய நன்மை, கூட்டு முயற்சி. |
| மிதுனம் | மனோசங்கடம், அதிக செலவு, ரோகநிலை, திடீர் நன்மை. |
| கடகம் | மாதர் நட்பு, வெகுமானம், நல்ல முயற்சி, தெய்வசிந்தை. |
| சிங்கம் | உஷ்ண நிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், சுபசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு,சயனசு கம், தனதானியசேர்க்கை, ஆனந்தம் |
| துலாம் | ஆரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய சித்தி, நன்கொடை. |
| விருச்சிகம் | நிலை மாற்றம், புத்திரரால் கவலை, பிரயாணம், பணவிரயம். |
| தனுசு | அபகீர்த்தி, காரியதடங்கல், தர்மம், போசன சுகம். |
| மகரம் | நல்ல முயற்சி, தனலாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | காரிய அனுகூலம், கீர்த்தி, போசன சுகம், உற்சாகம். |
| மீனம் | தாழ்வுநிலை, முயற்சிதாமதம், தனவிரயம், போசன சுகம். |

வளவன்

## காரைநகர் முன்பள்ளி விளையாட்டுப்போட்டி

(காரைநகர்)

காரைநகர் பிரதேசசபை உள்ளூராட்சி வாரத்தையொட்டி அப் பிரதேசத்திற்குட்பட்ட முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியை இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ரன் கல்லூரியில் காரைநகர் பிரதேசசபை செயலாளர் இரா. லோகநாதன் தலைமையில் நடத்தவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக காரை வடக்கு விவசாய சம்மேளனத் தலைவர் அ.சிவநாதன், ஓய்வு பெற்ற அதிபர் செ. இராமுப்பிள்ளை, ஓய்வு பெற்ற அதிபர் க. தில்லையம்பலம், கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் எஸ். இராஜச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். ஓ

## காணி உரிமை ஆவணங்கள் பெற்றுக்கொடுத்தல்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு பிரதேசத்தில் மீளக் குடியேறவிருக்கும் மக்களின் காணி உரிமை ஆவணங்களை பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள யாழ்ப்பாண சட்ட உதவித்திட்ட நிறுவனம், அத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக வலி தெற்கு (உடுவில்) பிரதேச செயலக பிரிவில் தற்பொழுது வாழும் மக்களுக்கு இச் சேவை உடுவில் பிரதேச செயலகத்தில் நாளை மறுநாள் திங்கட்கிழமை காலை 9மணிமுதல் 12 மணிவரை வழங்கப்படவுள்ளதாக நிறுவன இயக்குனர் செல்வி. சாந்தா அபிமன்னசிங்கம் அறிவித்துள்ளார். ஓ

## பரிசளிப்புவிழா

(பருத்தித்துறை)

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய பரிசளிப்பு விழா லண்டன் தொண்டைமானாறு நற்பணி மன்ற அனுசரணையுடன் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி கலந்துகொள்ளவுள்ளார். பரிசில்களை திருமதி சாந்தினி சிவசுவாமி வழங்கிக் கௌரவிப்பார். ஓ

## கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி கல்விக் கண்காட்சி 20ஆம் திகதி திங்கட்கிழமையும் 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். ஓ

## வருடாந்த கலைவிழா

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் அறிவொளி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த கலைவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1 மணிக்கு அறிவொளி சனசமூக நிலையக் கலையரங்கில். நிலையத் தலைவர் எ.எம். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பாலர் கல்விக் கழகத் தலைவர் இராசையா ஸ்ரீதரன், சிறப்பு விருந் தினர்களாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வே. கந்தசாமி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகதர் ரி. ஜெயச்சந்திரன், உளசமூக மேம்பாட்டு உத்தியோகத்தர் செல்வி செலீன் அழகரட்ணம், யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் மேற்பார்வையாளர் ரி. சோமசுந்தரம், உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலய ஆசிரியர் திருமதி சந்திராதேவி சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் 2008 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற அறிவொளி முன்பள்ளியின் 2003 ஆம் வருட மாணவி செல்வி கருணாசலம் ரஜித் தா கௌரவிக்கப்படவுள்ளார். ஓ

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை - 18

சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சி சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றிற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

### 'பயிர் செய்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்'

# வீட்டுத் தோட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பயிர்செய்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம், உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிப்போம் என்ற சிந்தனையின் கீழ் இவ்வருடம் வீட்டுத் தோட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

இவ்வருடம் சகலரும் பங்குபற்றக் கூடிய வகையில் வீட்டுத்தோட்டப் போட்டி நடைபெறவுள்ளது. அதாவது தனிநபர், அரசநிறுவனங்கள், பாடசாலைகள், பாடசாலை மாணவர்கள், சமூக மட்ட நிறுவனங்கள், அரசாங்க விடுதிகள் என்பன பங்குபற்றக் கூடியவகையில் பின்வருமாறு போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

தனியார் வீட்டுத்தோட்டப் போட்டி, விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி தொடர்பான மாதிரி வீட்டுத் தோட்டப் போட்டி, அரச நிறுவனங்களிற்கான வீட்டுத் தோட்டப் போட்டி, அரச பாடசாலைகளுக்கான வீட்டுத்தோட்டப் போட்டி, பாடசாலைச் சிறுவர்களிற்கான வீட்டுத் தோட்டப் போட்டி, சமூக மட்ட நிறுவனங்களிற்கான வீட்டுத்தோட்டப் போட்டி, அரச/தனியாரினால் பராமரிக்கப்படும் விடுதிகளுக்கான வீட்டுத்தோட்டப் போட்டி மேற்குறிப்பிட்ட போட்டி பிரதேச மட்டம், மாவட்ட மட்டம், மாகாணமட்டம் மற்றும் தேசிய மட்டம் என 4 மட்டங்களில் நடாத்தப் படவுள்ளதுடன், பிரதேச மட்டத்தில் முதலிடம் பெறும் வீட்டுத் தோட்டப் போட்டியாளர் மாவட்ட மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளும் சந்தர்பபத்தினைப் பெறுவதுடன், மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்தில் வெற்றிபெறும் போட்டியாளர்களுக்கு சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான நிபந்தனைகள், விண்ணப்ப படிவங்களை அவ்வப் பகுதி பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் 30.11.2008 க்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். ஓ

## பெரும்போக நெற்செய்கைக்குரிய காப்புறுதி

(யாழ்ப்பாணம்)

2008/2009ஆம்ஆண்டு பெரும் போகத்திற்கான நெற்பயிர்க் காப்புறுதி நடவடிக்கைகள் வழமைபோல் செப்டம்பர் மாதம் 15 ஆம்திகதிமுதல் நடைபெற்றுவருகின்றது.

இதுவரை இத் திட்டத்தில் இணைந்து கொள்ளாதவர்கள் இம் மாதம் 31 ஆம் திகதி வரை தத்தமது கமநல சேவை நிலையங்கள் ஊடாக இணைந்துகொள்ள முடியும் எனவும்இத் திட்டத்தில் கீழ் 1 ஏக்கர் வயலுக்கு 200/- கட்டுப்பணம் செலுத்தி 4000/- வரையிலான காப்பீட்டினை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். ஓ

## முன்பள்ளி ஆசிரியர் தின விழா

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை நடாத்தும் கரவெட்டிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர் தின விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9மணிக்கு கலாசார மண்டபத்தில் செயலாளர் வே.குலநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-19)

# யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கு அறுவடைக்காலத்தில் யாழிற்கு கிழங்கு கொண்டு வருதலை தடுக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இம்முறை பெருவாரியான அளவில் உருளைக்கிழங்கு உற்பத்தி ஆரம்பிக்கப்படுகின்ற நிலையில் அதன் அறுவடைக்காலத்தின் போது யாழ்ப்பாணத்திற்கு உருளைக்கிழங்கு எடுத்துவருவது நிறுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். தேசவள விவசாயிகள் சம்மேளன நிர்வாகிகள் அமைச்சரிடம் நேரடியாக விடுத்த வேண்டுகோளையடுத்தே மேற்கண்டதகவலை அறிவித்துள்ளார்.

முன்னதாக யாழ்.மாவட்டத்தில் உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்கு வசதியாக கொழும்பு விலையில் விதை உருளைக்கிழங்குகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் மேற்கொண்டிருந்தமை தெரிந்ததே.

அமைச்சரின் ஆலோசனைக்கிணங்க, யாழ்.தேசவள விவசாயிகள் சம்மேளனம், விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்பன இணைந்து விதை உருளைக்கிழங்கை விவசாயிகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததுடன் விதை உருளைக்கிழங்கினைக் கொழும்பில் கொள்வனவு செய்து அவற்றை யாழ்.குடாநாட்டிற்குக் கொண்டு வந்து விநியோகிப்பதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தித் திட்டத்தின் உதவிகள் கோரப்பட்டிருந்தது.

யாழ்.குடாநாட்டில் விதை உருளைக் கிழங்கின் விலையேற்றம் உட்பட சந்தைப் படுத்தும்போது அதன் விலையிறக்கம் காரணம் 2007 மற்றும் 2008 காலபோகத்தில் 33 ஹெக்டேயரில் உருளைக்கிழங்குச் செய்கையை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும், 11.2 ஹெக்டேயரில் மட்டுமே உருளைக்கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.


ஆயினும் இம்முறை 2008 மற்றும் 2009 இற்கான காலபோகத்தில் 29 ஹெக்டேயர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு பயிரிடத் திட்டமிட்டுள்ளதுடன் இதற்கென 75 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கினைக் கொழும்பிலிருந்து யாழ்.குடாநாட்டிற்குக் கொண்டு வருவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை அமைச்சர் மேற்கொண்டு வந்திருந்தார்.

மேலும் கொழும்பு விலையிலேயே விதை உருளைக்கிழங்கினை யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சரின் யாழ்.இணைப்பதிகாரி தெரிவித்துள்ளார்.




இந்நிலையில் கடந்த முறைபோன்று உருளைக்கிழங்கு அறுவடை காலத்தின் போது இறக்குமதி உருளைக்கிழங்கு காரணமாக தாம் பெரு நஷ்டமடைய வேண்டி ஏற்படும் என்ற யாழ்.குடாநாட்டு விவசாயிகளின் நியாயமான அச்சம் தேசவள விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இவ்விடயத்தில் கூடிய கவனஞ் செலுத்திய அமைச்சர் உருளைக்கிழங்கு அறுவடைக் காலத்தின் போது அது குறித்த உரிய அறிவித்தல்கள் வழங்கப்படும்.

இதனைப்புரிந்துகொண்டு உருளைக் கிழங்கு குடாநாட்டிற்கு எடுத்துச் செல்லப் படமாட்டாது எனத் தெரிவித்துள்ளதுடன் யாழ்.விவசாயிகள் நஷ்டம் குறித்து எவ்வித அச்சமும் இன்றி தமது உற்பத்தியினை ஆரம்பிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார். ஓ



குருநகர் நாட்டுக்கூத்து மன்றம் விஜயதசமி தினத்தன்று ஹர்மோனிய வகுப்பை ஆரம்பித்தது. இதில் இணைந்துகொண்ட மாணவர் கி.சுமேலன் குருவித்துவான் யோன் வரவாசுக்கு தட்சணை வழங்குவதையும், நடிகர் தயாநிதி மற்றும் அண்ணாவி கிறகரி கிறிஸ்தோபர் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.




# யாழ்.செய்திகள்

## இரண்டு பேர் பங்குபற்றும் கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரபந்தாட்ட சங்கத்தினர் மிக விரைவில் இரண்டு பேர் பங்குபற்றும் கரபந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளனர்.

எனவே அச்சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தங் கள் விண்ணப்பங்களை சங்க செயலாளர் கி.மனோகரன், இல 186/26, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.கரபந்தாட்ட சங்கம் கேட்டுக் கொள்கின்றது. இப்போட்டியில் ஒரு கழகத்தில் இருந்து இரண்டு அணிகள் வீதம் பங்குபற்ற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓ

# நோத்முதல் கோபல்லவா வரை 128



## திருத்தப்பட்ட சட்ட சபை

ஆள்பதி மனிங் அவர்கள் இலங்கைக்கு வந்த காலத்தில் அரசியற்றிருத்தஞ் செய்வதற்குத் தமக்கு ஒத்தாசை செய்யுமாறு சேர். இராமநாதன் கேட்டபோது முடியாது என்று தலை அசைத்தார். ஆனால் சேர். இராமநாதன் நெக்குவிடாப் பாறையையும் நெக்குவிடச் செய்துவிடுவதற்கு சாமர்த்தியமாக மெல்லெனப் பேசி வந்தார்கள். ஈற்றில் மனிங் இலங்கையை விட்டு போன போது சொன்ன வாசகம் இலங்கையர் மனதை விட்டகலாவகையில் இருத்தல்வேண்டும். **நான்இலங்கைக்கு வந்த காலத்தில் தீவிர பழமை பேணுபவனாகவே இருந்தேன். ஆனால்இன்று இலங்கையை விட்டு போகும்போது ஆட்சி அதிகாரத்தை இலங்கையர் கையில் ஒப்படைத்து விட்டுத் தாராளமனப்பான்மையுள்ளவனாயே போகின்றேன்"**

ஆறரை ஆண்டுக் காலம் இலங்கையை ஆண்ட ஆள்பதி மனிங் இளைப்பாறிப் போனதும், ஆள்பதி சேர் கிளிபோட் 1925 ஆம் ஆண்டில் வந்தார். அவர் எங்கள் நாட்டுக்குப் புதியவரல்லர்.

முன்னர் 1907 ஆம் ஆண்டு தொடக்கம் 1913 ஆம் ஆண்டு வரையும் இலங்கையில் குடியே ற்றக் காரிய தரிசியாயிருந்து அனுபவம் பெற்றவர். அவர் இருபதாண்டு காலம் மலாயாவில் உயர்தர உத்தியோகம் வகித்து அநுபவம் பெற்றவர்.


அவர் மலாய் மொழியில் பல தொண்டுகள் செய்தமையோடு ஓர் அகராதியும் ஆங்கில தண்டக்கோவையை மொழி பெயர்த்தும் மலாய் மொழிக்கு உபகரித்தார். ஆபிரிக் காவில் உள்ள கானா நாட்டில் ஆள்பதி யாகவும் சிலகாலம் இருந்த கிளிபோட் அவர்களுக்கு ஆசிய ஆபிரிக்க பிரச்சினைகள் நன்கு விளங்கின.

ஆள்பதி கிளிபோட் இராமநாதனுடன் சட்டசபையில் பல முறை மோதிக் கொண்டதுண்டு. கிலிபிடித்த கிளிபோட் என்றே இராமநாதன் ஆள்பதியைக் குறிப்பிடுவது வழக்கமாயிருந்தது. சீர்திருத்தங் கோரிய இலங்கையரின் சொல்லம்பு கிளிபோட் அவர்களை வெகுவாகத் தாக்கின.

அவர் சட்டசபையை மேலுங்கொண்டு நடத்த முடியாதிருந்தார். எனவே அவர் குடியேற்ற மந்திரியாரிடம் உடனடியாகச் சட்டசபையில் திருத்தங்கள் செய்வதற்கு ஓர் ஆலோசனைச்சபையை அனுப்பி வைக்குமாறு அவசரமாக எழுதி னார். தம்மை வேறெங்காவது மாற்றி விடும்படி மந்திரியாரைக் கேட்டார்.

### மீன் பார்வை

அதனால் மந்திரியார் கிளிபோட் அவர்களை மலாய்த்தீவுகளுக்கு மாற்றி விட்டார். ஆள் பதி கிளிபோட் அவர்களுக்குப் பின் சேர். ஹேற பேட் ஸ்ரான்லி ஆள்பதியாக 1927 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்தார். அவர் ஆபிரிக்காவில் பல உத்தியோகங்களை திற மையாக வகித்தவர்.



முதலாவது அரச சட்டவாக்கற் பேரவை திறந்து வைக்கப்பட்ட நாள் (29ஜனவரி 1930)

ஆள்பதி கிளிபோட் இலங்கைக்கு அரசியல் திருத்த சபையினரை அனுப்புமாறு எழுதிய தகவுரையைக் கண்டதும் குடியேற்ற மந்திரியாருக்கும் அவருடைய அலுவலகத்தா ருக்கு ம் துணிவு பிறந்து. அவர்கள் சீர்திருத்தக் குழுவொன்றை உடனடியாக அனுப்பத் தீர்மானித்தார்கள் . பிரபுக்கள் சபையின் உதவி த்தலைவராயிருந்த டொனமூர்பிரபு, கேம்பிரிஜ் சர்வகலாசாலைத் தொகுதியின் பிரதி நிதியாய் இருந்த சேர். யெவ்ரிபட்லர், ஸ்கொத்லாந்துப் பிரதி நிதியாய் யிருந்த கலாநிதி திறமன்சீல் , கொங் கொங் நாட்டின் பழைய ஆள்பதியாயசேர் மாதியூநாதன் ஆகியோர் அவ்விசாரணைச் சபையிலிருந்தனர்.

டிவன்சயர்- மனிங் திருத்தத்தின் வண்ணம் அமைந்த இச்சபையின் அமைப்பை இன்னொரு வழியிற் பார்த்தால் இதிலுள்ள 37 அங்கத்தவருள் பெரும் பான்மைச் சாகியத்தாரின் பிரதிநிதிகள் 18பேராயும் சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் 19 பேராயும் இ ருந்தனர். இருபத்தொன்பது பேரில் ஒன்பதின்மர் தமிழராயிருந்தனர். இம்முறையினால் ஒரு சாகியத்தார் பிறிதொரு சாகியத்தாரை அடக்கி ஒடுக்கா வண்ணம் யாப்புப் பாதுகாப்பு அமைந்து இரு ந்தது.

அன்றி இந்த அமைப்பில் பத்து வருட காலம் நடைபெற்ற சட்டசபையின் வைகல்களில் என்றாவது வாதப் பிரதிவாதங் களின் பின் வாக்கெடுப்பின் போது சிறுபான்மையோர் தனித்து ஒருபுறமாயும் பெரும்பான்மையோர மறுபுறமாயும் வாக்களிக்கவில்லை என்றும் இவர்கள் பெருந் தன்மையாய் நடந்து கொண்டார்கள் என்றும் ஆள்பதி ஸ்ரான்லி அவர்கள் 1929 இல் குடியேற்ற மந்திரியாராய பஸ்வீல்ட் பிரபுவுக்குத் தமது பரிபாலன அறிக்கையில் எழுதியுள்ளார்.

க.சி.குலரத்தினம்


சட்டசபைக்கு அலங்காரமான் கட்டடம் ஒன்று இல்லாத குறை நீக்கப் பெரிய கட்டடம் புதிதாகக் கட்டப்பட்டது. அது கோலாகலவைபவத்திடையே ஆள்பதி அவர்களால் 29-1-1930 இ ல் திறந்து வைக்கப் பட்டது.

**நிதிக்குழு**

மனிங் - டிவன்சயர் திருத்தத்தின் பின் சட்ட சபையில் ஏற்பட்ட பெரிய பரபரப்புக்களும் சொற்போர்களும் நிதிக்குழுக்கூட்டங்களிலேயே அதிகமாக நடைபெறலாயின. நாளடைவில் சட்டசபையிலும் பார்க்க வலுவுள்ள ஸ்தாபனமாக அந்த நிதிக்குழு நிலவலாயிற்று. குடியேற்றக் காரியதரிசி என்னும் பிரதம செயலாளருடைய தலைமையில் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர் சமூகத்தில் அக்கூட்டங்கள் நடைபெற்றன.

(தொடரும்)

# தெற்காசியாவில் வறுமைக் குறைப்பும் பொருளாதார வளர்ச்சியும் 3



பாகிஸ்தானின் பொருளாதார வளர்ச்சியை நோக்கின், உயர்ந்த தேசிய கடன் சுமை மற்றும் பண அனுப்புதல்கள் (Remittance), சலுகையடிப்படையிலான மூலதனப் பாய்ச்சல்கள் (Concessionary capital Flows) ஆகியவற்றிலான நீடித்த வீழ்ச்சி போன்றவற்றினால் ஏற்பட்ட பேரின பொருளாதார நெருக்கடிகள் 1980களில் 6% மாக இருந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தினை அரைவாசியாக்கி உள்ளதுடன் 1990 களில் இருந்த பொருளாதார தேக்க நிலை (Economic Stagnation) வறு மையை 8% மாக அதிகரித்தமையும் கவனிக் கத்தக்கதாகும்.

ஆயினும் இந்நிலைமை 2001க்குப் பின்னர் மாற்றம் அடைந்தமை முக்கியமான அம்சமாகும். அதனைத் தொடர்ந்து கடன் சுமை (Debt burden) குறைக்கப்பட்டதுடன் சலுகை அடிப்படையிலான மூலதானம் மற்றும் வெளிநாட்டு பண அனுப்புதல்கள் என்பன அதிகளவில் உள்வரத் தொடங்கியுள்ளன.

மேலும் வங்கித் தொழில், சக்தி வளத்துறை (Energy Sector) மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சி களை தனியார்மயப்படுத்தல் (privatization) போன்றன அண்மைய ஆண்டுகளில் பாகிஸ்தானை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளன.

பொதுவாகவே வெளியக நிதி மூலங்களில் நாட்டில் வதியாதோரால் தாய் நாட்டுக்கென அனுப்பும் பண அனுப்புதல்களால் கிடைக்கும் முதலீட்டு உட்பாய்ச்சல்கள் முக்கிய இடம்பெறுகின்றன. இவை முதலீட்டளவை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை தூண்டும் என்பது பொருளாதார கோட்பாடுகளின் விளக்கமாகும். இந்த வகையில் 2004-05 இல் வெளிநாடுகளில் வேலை செய்யும் தெற்காசியர்களால் நாட்டுக்கு அனுப்பிய பண அனுப்புதல்கள் மொத்தமாக $ 22 பில்லியன்களாக இருந்ததுடன், இவை சென்மதி நிலுவைகளில் (Balance of Payment) பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கு (Stability) காரணமாகவும் அமைந்தன. ஒப்பீட்டு ரீதியில் இப் பண அனுப்புதல்கள் கிழக்காசியாவைவிட தெற்காசியப் பிராந்திய வெளியக நிதி மூலகங்களில் மிகவும் முக்கியமானவையாகும்.

கருக்கமாகக் கூறின் விரும்பத்தக்க வெளிச் சூழ்நிலைகள் தெற்காசியாவின் திடமான பொருளாதார செயலாற்றுகைக்கு பங்களித்துள்ளன எனலாம்.

கடந்த ஒரு சில வருடங்களில் நிலவிய சிறந்த காலநிலை பெரும்பாலான நாடுகளின் GDPயில் முக்கிய பங்கு வகிக் கும் விவசாயத் துறையில் உயர்ந்த வெளி யீட்டை நல்கியுள்ளது.

அத் துடன் உலக ரீதியான குறைந்த மட்ட வட்டி வீதமும் சில நாடுகள் சர்வதேச சந்தைகளில் கடன் பெறுவதற்கு உதவியுள்ளது. ஆயினும் கடந்த சில வருடங்களில் இடம்பெற்ற இயற் கை பேரிடர்கள் (பங்களாதேஷில் வெள்ளப்பெருக்கு, இந்தியா, மாலைதீவு மற்றும் இலங்கை ஆகியவற்றில் சுனாமி, பாகிஸ்தானில் பூமியதிர்ச்சி) உட்பட பல பாதகமான அதிர்ச்சிகளால் இப் பிராந்தியம் பாதிப்பிற்குள்ளாகியது.

அத்துடன் தற்போது உலக சந்தையில் நிகழும் எண்ணெய் விலையின் தீவிரமான அதிகரிப்பும் பாதிப்பினை ஏற்ப டுத்தி வருகின்றது.

**பொருளாதார வளர்ச்சியும் வறுமைக் குறைப்பும்**

கடந்த தசாப்தத்தில் இடம்பெற்ற குறிப்பிடத்தக்க பொருளாதார செயலாற்றுகையானது கிழக்காசியாவின் 07-10 சதவீதமளவிலான பொருளாதார வளர்ச்சியை தெற்காசிய பிராந்தியமும் எட்டிவிடும் என்ற நம்பிக்கையை தெற்காசிய கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் இத்தகைய வளர்ச்சியை நீடித்திருக்கச் செய்யக்கூடிய வகையில் கொள்கை களும் நிறுவன அமைப்புக்களும் வலுவூட்டப் பட்டுள்ளன. இதனால் வறுமையில் கணிசமானளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமையை அட்டவணை - 02 காட்டுகிறது.

**சார்க் நாடுகளில் வறுமை**

| நாடு | (சதவீதத்தில்) | 2015 (வருட GDP வளர்ச்சி 10%இல்) சதவீதத்தில் |
|---|---|---|
| பங்களாதேஷ் | 49.8 (2000) | 12.6 |
| இந்தியா | 22.7 (1999-2000) | 12.5 |
| நேபாளம் | 31 (2003-2004) | 09.4 |
| பாகிஸ்தான் | 35.2(2001-2002) | 7.5 |
| இலங்கை | 22.7 (2007) | 04.3 |

*மூலம்-உலக வங்கி அறிக்கை -2006யூன்*

அட்டவணையின் படி 2015 ஆம் ஆண்டு வரை பொருளாதார வளர்ச்சி வருடாந்தம் 10% என உயர்ந்த மட்டத்தில் பேணப்படுமாயின், தற்போதுள்ள 23% (இந்தியா, இலங்கை) இலிருந்து 5% (பங்களாதேஷ்) வரையான வறியோர் வீதமானது 2015 அளவில் மிகக் குறைந்தளவான 4% - 13% வரை வீழ்ச்சியடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இத்தருணத்தில் வறுமை என்றால் என்னவென்று சிந்திப்பது பயனுள்ளதாக அமையும்.

புத்தாயிரமாண்டு பிரகடனம்/அபிவிருத்தி இலக்குகள் (Millennium declaration/ development goals) போன்ற சர்வதேச பிரகடனங்களின் படி வறுமை என்பது ஆரோக்கியமின்மை (ill-health), கல்வியறிவின்மை (illiteracy), குடிநீர் மற்றும் சுகாதார வசதியின்மை, சூழல் சீர்கேடு (Environmental degradation) போன்ற பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கியதாக விளக்கப்படுகின்றது. இவ்வாறான பிரச்சினைகளை நீக்குதல் என்பது மட்டும் வறுமையை முடிவுக்கு கொண்டு வருவதாக அமையாது.

**விமலேந்திரன் பாரதிதாஸ்**
உதவி விரிவுரையாளர்
பொருளியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

ஆயினும் இத்த கைய நடவடிக்கைகள் மூலம் ஏழை மக்க ளின் நலச்சேவைகளை வெகுவாக முன்னேற்ற முடியும் என கூறப்படுகிறது.

சார்க் நாடுகள் வளர்ச்சியை துரிதப்படுத்த முடிந்தாலும் வறுமையை முடிவுக்கு கொண்டு வருவதில் அடிப்படையான மூன்று சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

அத்தகைய சவால்கள் பின் வருவனவாகும். (தொடரும்)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்- கணிதம்

**பகுதி A  பரீட்சை XI  நேரம் -40 நிமிடங்கள்**

### A — Answer

1 $\frac{1}{11}+\frac{3}{11}=$ ______

2 AB சமாந்தரம் CD ஐ குறியீட்டில் தருக. ______

3 $3x\times 2x$ சமன். ______

4 "சுடச்சுட" என்ற சொல்லில் உள்ள எழுத்துக்களிலிருந்து ஓர் எழுத்து எழுமாற்றாகத். தெரியப்பட்டால் மாதிரிவெளி S சமன் ______

5 $10\%=\frac{\square}{100}$ ஆயின் □ இல் வரும் எண் ______

6 $101_{இரண்டு}$ இல் 0 இன் இடப்பெறுமானம். ______

7 $y=3x$ இன் படித்திறன். ______

8 $\sum fx=50, \sum f=10$ ஆயின் இடை யாது? ______

9 1 : 200 எனும் அளவுத்திட்டத்தில் 1cm குறிக்கும் உண்மை நீளம் cm இல். ______cm

______

### B — Answer

1 $\frac{3}{4}+\frac{1}{8}+2$ சமன். ______

2 
> எதிர்ப்பக்கங்கள் சமாந்தரமான நாற்பக்கல் இணைகரம் எனப்படும்.

இணைகரம் ABCDல் $\hat{A}=80^\circ$ ஆயின் $\hat{B}$ ______

3 அடைப்பு நீக்கி சுருக்குக. $(3x+2)(5-2x)$ ______

4 P(A)= $x$ ஆயின் $P(A')=y$ எனின் $x+y$ இன் பெறுமானம் யாது. ______

5 பொருளொன்றை அதன் கொள்விலை இலும் 40 ரூபாகூட்டி விற்பதன் மூலம் 20% இலாபம் பெறப்படும்.விற்பனை விலை யாது? ரூ______

6 $101_{இரண்டு}$ ஐ அடி பத்தில் எழுதுக. ______

7 $y=3x-1$ என்ற நேர்கோட்டின் வெட்டுத் துண்டை எழுதுக. ______

8 ஒரு பரீட்சையில் 20 மாணவர்கள் பெற்றபுள்ளிகளின் ஆகாரம்,இடையம், 45,40ஆகும்.20 இடை முறையே 38,மாணவரினதும்புள்ளிகளின் கூட்டுத் தொகையைக் காண்க. ______

9 இரண்டு கிராமங்களுக்கிடையே உள்ள தூரம் 4km ஆகும்.1 : 500 எனும் அளவிடைக்கு அமைய வரையப் பட்டுள்ள தேசப்படத்தில் இரு கிராமங்களையும் குறிக்கும் இரு புள்ளிகளுக்கிடைப்பட்ட தூரம் யாது? ______

10 $(2x+3)^2$ இனை விரித்து எழுதுக். ______

### C — Answer

1 $1=\frac{1}{4}+\frac{3}{8}+\square$ ______

2 
> இணைகரத்தின் பண்புகள்
> 1.எதிர் பக்கங்கள் சமன்.
> 2.எதிர் கோணங்கள் சமன்.
> 3மூலை விட்டங்கள் ஒன்றையொன்று இரு சம கூறிடும்
> 4. மூலைவிட்டம் அதன் பரப்பை இரு சமகூறிடும்.

ABCD,ABEF என்பன இரு சமாந்தர வரைகளுக்கு இடையிலுள்ள இரண்டு இணைகரங்கள் ஆகும்.CE இற்கு சமனான பக்கம் யாது? ______

3 $(2x+5)^2=4x^2+.....+......$ இல் வெற்றிடங்களை நிரப்புக. ______

4 ஒரு பயிற்சி நிலையத்தில் சேர்க்கப்பட்ட 120 பயிற்சியாளர்களில் 110 பேர் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தனர்.
a) பயிற்சியாளர்களிடையே ஒருவர் எழுமாற்றாக தெரியும் போது அவர் பயிற்சியை வெற்றிகரமாக முடிக்காமல் இருப்பதற்கான நிகழ்தகவு யாது? a)______
b) பயிற்சியை முடித்தவர்களில் 8 பேர்அந்நிலையத்திலேயே போதனாசிரியராக நியமிக்கப்பட்டனர். ஒருவர் எழுமாற்றாக தெரியும் போது அவர் பயிற்சியை முடித்து போதனாசிரியராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது? b)______

5 384 ரூபாவிற்கு ஒரு பொருளை விற்கும் பொழுது4% நட்டம் ஏற்படுகிறது.4% இலாபம் கிடைக்க வேண்டுமெனில் அதனை எவ்விலைக்கு விற்றல் வேண்டும். ______

6 $1032_{நான்கு}$ என்பதை அடி இரண்டிலுள்ள எண்ணாகத் தருக. ______

7 $2x+y=6$ இனால் வகைக்குறிக்கப்படும் நேர்கோட்டின் படித்திறனையும், வெட்டுத் துண்டையும் காண்க. ______

8 ஒரு உதைப்பந்தாட்ட கோஷ்டி 7 போட்டிகளில் பெற்ற கோல்களின் எண்ணிக்கை பின்வருமாறு 0 , 2 , 3 , 5 8 , 11 , 13 .இக்கோஷடி எத்தனை போட்டிகளில் இடைப் பெறுமான கோலிற்கு மேலதிகமாக கோல்களைப் பெற்றது. ______


9 தேசப்படம்ஒன்றின் அளவுத்திட்டம் 1 : 20000 ஆகும். தேசப்படத்தில் இரு நகரங்களுக்கு இடையிலுள்ள தூரம் 6cm எனில் உண்மையான தூரத்தை km இல் பெறுக. ______km

10 $(2x+y)^2-(2x+y)^2$ இன் பெறுமானம் யாது? ______

### D — Answer

**1** $1\frac{3}{10}\div\left(\frac{1}{5}+\frac{2}{5}\right)$ ______

**2**




ABCD இணைகரம்.
a) $\triangle ADE$, $\triangle CBF$ எந்நிபந்தனையின் கீழ்ஒருங்கிசையும.
b) $A\hat{E}D$ இற்கு சமனான கோணம் யாது?
a)______
b)______


**3** $(......+7)^2=9x^2+.......+49$ இல் கீறிட்ட இடங்களை நிரப்புக. ______

**4** காய்கறி விதைகளைக் கொண்டிருக்கும் பைக்கற் ஒன்றிலுள்ள விதைகள் முளைப்பதற்கான நிகழ்தகவு 68% எனில் அம்மாதிரியான விதைகள் 50 இல் எத்தனை விதைகள் முளைக்காமல் இருக்குமென நீர் எதிர்பார்ப்பீர்? ______

**5** ரூபா10 இற்கு வாங்கப்பட்ட பொருளொன்று ரூபா12 இற்கு விற்கப்பட்டால்
a)இலாபத்தை கொள்விலையின் ஒரு பின்னமாகத் தருக.
b)சதவீத இலாபம் எவ்வளவு.
a)______
b)______

**6** சுருக்குக. $1101_{இரண்டு}+32_{நான்கு}$
(விடையாகக் கிடைக்கும் எண்ணை அடி நான்கில் தருக.) ______

**7**




உருவில் $2y=x+10$, $x=5$ ஆகிய நேர் வரைகள காட்டப்பட்டுள்ளன.
a)C
b)D
இன் ஆள்கூறுகளை எழுதுக.
a)______
b)______

**8** பாத்தி ஒன்றிலுள்ள 10 மிளகாய்ச் செடிகளில் இருந்து குறித்த நாள் ஒன்றில் பிடுங்கிய மிளகாய்கள்16 , 9 , 3 , 16 , 6 , 22 , 13 , 24 , 9 , 9 இப்பரம்பலின்
a) ஆகாரம்
b) இடையம
c) இடை என்பவற்றைக் காண்க.
a)______
b)______
c)______

**9** Pயிற்கு 90km கிழக்கே Qஉம் Qவிலிருந்து 060° திசைகோளில் 90km தூரத்தில் Rஉம் ஆகுமாறு P,Q,R என்ற மூன்று நகரங்கள் உண்டு.
a) 1cm இனால் 15km வகைக்குறிக்கப்பட்டால் அளவிடைப்படத்தில் PQ இன் நீளம் யாது?
b) P இலிருந்து R இன் திசைகோள் யாது?
a)______
b)______

**10** $x+y=2, x^2+y^2=6$ எனின்
a) $xy$
b) $(x-y)^2$ என்பவற்றின் பெறுமானங்களை காண்க.
a)______
b)______

ஜே.மரியநாயகம்

| | A | B | C | D | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | | | | | |

# பயிர் பாதுகாப்பில் விவசாயிகளின் நண்பர்கள்

நாம் வளர்க்கும் சில பயிர்களைத் தாக்கி சேதப்படுத்தும் பூச்சிகளையும் பயிர்களின் உற்பத்தியை பாதிக்கும் சில நோய்களையும் கட்டுப்படுத்துவதற்கு நாம் பல்வேறு வகையான முறைகளைப் பின்பற்றுகிறோம்.

இன்றைய கால கட்டத்தில் இலங்கையில் பெரும ளவான விவசாயிகள் அதிகளவில் நச்சுமருந்துகளைப் பயன்படுத்துகின்றனர். இந்த நச்சு மருந்துகளின் மிகையான பாவனையால், இப்பூச்சிகளையும் நோய்களையும் கட்டுப் படுத்தல் தற்பொழுது மிகவும் கடினமாகவும் செலவு மிக்கதாகவும் அமைகின்றது. அதுமட்டுமன்று. சூழலுக்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் மனித இனத்துக்கு உயிராபத்தை விளைவிக்கக் கூடிய நோய்களையும் (Cancer) ஏற்படுத்தி மனிதனுக்கு நன்மை செய்கிற உயிரினங்களையும் அதிகளவில் பாதிக்கின்றது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக தற்போதைய கால கட்டத்தில் உயிரியல் பீடைக் கட்டுப்பாட்டிற்கே விவசாய ஆராய்ச்சியாளர்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அந்த வகையில் சில பயிர்களைத் தாக்கும் பூச்சிகளையும் நோய்களையும் கட்டுப்படுத்துவதில் பகைப் பூச்சிகளினதும் மற்றும் நுண்ணுயிர்களினதும் பங்கு பற்றி நாம் கட்டுரையில் அறியலாம்.

**தென்னையில் கருத்தலைப் புழுவை கட்டுப்படுத்தல்**

இப்புழுக்களின் தாக்கத்தினால் தென்னை இலைகள் எரிந்ததுபோல காட்சி அளிப்பதுடன் பாரிய உற்பத்திக் குறைவையும் ஏற்படுத்துகிறது. இதனை கட்டுப்படுத்த எரிபோறஸ் என்ற ஒருவகை ஒட்டுண்ணி. பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் வெத்தலிட் பிரக்கனிட் யூலோபிட் என்பனவும் இக்கருந்தலை புழுவை கட்டுப்படுத்த பயன்படுகின்றன.

இந்த ஒட்டுண்ணிகள் முட்டைகளை இக் கருந்தலைப்புழுவின் உடலினுள் இடுக்கின்றன. முட்டை பொரித்து வரும் இளம் பருவங்கள் இக் கருந்தலைப் புழுவை உணவாகப் பயன்படுத்தி அவற்றை அழிக்கின்றன.

**பழமரங்களைத் தாக்கும் மாவுப் பூச்சிகளையும் செதில் பூச்சிகளையும் கட்டுப்படுத்தல்**

திராட்சை, எலுமிச்சை மற்றும் கொய்யா போன்ற பழ மரங்களில் மாவுப்பூச்சிகளும், செதில் பூச்சிகளும் பெருமளவில் தாக்கி சேதமேற்படுத்துகின்றன. ஒருவகை பொறிவண்டும் அதன் இளம் புழுக்களும் இம் மாவுப் பூச்சிகளையும் செதில் பூச்சிகளையும் உட்கொண்டு வாழ்கின்றன. இதன் பெயர் கிரிப்டோலைமஸ் மாண்டிரிசோரி என்பதாகும். இது ஒருவகை அவுஸ்திரேலிய பொறி வண்டு. திராட்சைக் கொடியில் தோன்றும். மாவுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு கொடிக்கு 10 தாய் வண்டுகள் வீதம் மாலை நேரத்தில் கொடிகள் மீது இடவேண்டும். இவ்வாறு செய்தால் கொடிய மாவுப்பூச்சிகளையும் செதில் பூச்சிகளையும் எளிதில் கட்டுப்படுத்தலாம். நச்சுமருந்துகள் தேவையில்லை. நமது உடலுக்கு தீங்கும் இல்லை.

**சாற்றை உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்தல்**

சில பூச்சி வகைகள் தாவரங்களின் குருத்துப் பகுதியில் வாழ்ந்து அத் தாவரங்களின் சாற்றை உறிஞ்சி வாழ்கின்றன. அசுவினிகள், மாவுப்பூச்சிகள், பயிர் சிலந்திகள், இலைப் பேன்கள், சில்லிட் எனப்படும் பூச்சிகள், வெள்ளை ஈக்கள், தத்துப் பூச்சிகள் ஆகியவை தாவரங்களின் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்துகின்றன. இறைசோபா எனப்படும் ஒரு வகை கண்ணாடி இறக்கைப்பூச்சி இவ் வகைப் பூச்சிகளை உயிருடன் இரையாக விழுங்கி விடுவதாக அறியப்பட்டுள்ளது.

இறைசோபாவின் புழுக்களை ஏக்கருக்கு 40ஆயிரம் என்ற அளவில் இருவார இடைவெளியில் 5 முறை வயலில் விடுவதன் மூலம் இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். இவ்வகைப் பூச்சிகள் துவரை மற்றும் பருத்திப் பயிர்களைத் தாக்கும் எலியோதிஸ் போன்ற காய் புழுக்களின் முட்டைகளையும் இளம் புழுக்களையும் கூட உயிருடன் விழுங்கிவிடுகின்றன.

**நெற் பயிரில் தத்துப் பூச்சிகளையும் புகையான் பூச்சிகளையும் கட்டுப்படுத்தல்**

ஒருவகை நாய்வாய்ப்பூச்சி, நெற்பயிரை தாக்கும் தத்துப்பூச்சிகளையும் கட்டுப்படுத்துகின்றது. இதன் விஞ்ஞான பெயர் சிர்டோரைனஸ் லிவிடிபெனிஸ் என்பதாகும். தத்துப் பூச்சிகளையும் புகையான் பூச்சிகளையும், அவை இடும் முட்டைகளையும் குஞ்சுகளையும் இந்த பச்சைநிற நாய்வாய்ப் பூச்சிகள் தாக்கி அவற்றின் உடலிலுள்ள சாற்றை உறிஞ்சி உயிர்வாழ்கின்றன. இந்த பச்சைநிற நாய்வாய்ப்பூச்சிகள் இருக்கும் நெல் வயல்களில் பச்சை தத்துப்பூச்சிகளின் தாக்கமும் புகையான்களின் தாக்கமும் குறைவு. இதேபோல் ஓநாய் சிலந்தி எனப்படும் ஒருவகை சிலந்தியும் இப்பச்சை பூச்சிகளையும் புகையான் பூச்சிகளையும் உட்கொண்டு வாழ்கின்றன. எதிரிக்கு எதிரி



நமது நண்பன் என்பது போல் இப்பூச்சிகளை வளர்த்து தீங்கு விளைவிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் அல்லவா?

**சிற்றுண்ணிகளை கட்டுப்படுத்தல்**

மரக்கறி பயிர்களைத் தாக்கும் சிவப்பு சிற்றுண்ணிகளை கட்டுப்படுத்த அவற்றை பிடித்து உண்ணும் இரைகௌவி சிற்றுண்ணிகளைப் பயன்படுத்துவதன் மூலம் இச் சிற்றுண்ணிகளின் தாக்கத்தையும் அவற்றின் எண்ணிக்கையையும் குறைக்கலாம். இரைகௌவி சிற்றுண்ணிகளாக பைறலோசீலஸ் பேசிமைலிஸ் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் மூலம் தென்னையில் ஏற்படும் சிற்றுண்ணியின் தாக்கத்தையும் குறைக்கமுடியும்.

அதுமட்டுமன்றி மிளகாயில் சிற்றுண்ணி தாக்கத்தை குறைப்பதற்கு இச்சிற்றுண்



ணியின் பகையாளிகளாக அம்பிலேசியஸ் குக்குமெரிஸ், ஸ்றிதோறஸ் பேபகுலஸ் போன்ற சிறிய வண்டுகளையும் சிற்றுண்ணியில் நோய் விளைவிக்கும் பங்கசுக்களான போவேரியா பஸியானா, பியுசாரியம் செமக்ரிக்ரம், மெற்றாரைஸம் அனிசோபிலே போன்றவற்றையும் பயன்படுத்தலாம்.

**ஏபிட்டுக்களைக் கட்டுப்படுத்தல் (அழுக்கணவன்)**

பயிர்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் பல்வேறு வகையான ஏபிட்டுக்களை கட்டுப்படுத்துவதற்கு ஏபிடியஸ் மற்றிக்காறியே எனப்படும் குளவி ஒட்டுண்ணியானது முட்டைகளை ஏபிட்டுக்களின் உடலினுள் இடுகிறது. பொரித்து வெளிவரும் ஒட்டுண்ணியின் புழுவானது இவ் ஏபிட்டுக்களினை உணவாகக் கொள்வதன் மூலம் அழிக்கின்றது.

**நிலக்கடலைப் பயிரைத் தாக்கும் சிவப்பு கம்பளிப் பூச்சியைக் கட்டுப்படுத்தல்**

நிலக்கடலைப்பயிரைத் தாக்கும் சிவப்பு கம்பளிப்பூச்சிகள் மிகுந்த சேதத்தை ஏற்படுத்துகின்றன. அவரை இனப்பயிர்களான அவரை, துவரை, பாசிப்பயறு, உழுந்து போன்ற பயிர்களை எலியோதிஸ் எனப்படும் ஒருவகை பச்சைப்புழு தாக்கி நாசம் செய்கிறது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இப்பூச்சிகளைத் தாக்கி நோயை ஏற்படுத்தும் வைரஸ் நுண்ணுயிர்கள் பயன்படுத்தப்படுகின்றன .NPV எனப்படும் இவ் வைரசுக்களை ஆய்வுகூடத்தில் மேற்குறிப்பிட்ட புழுக்களின் உடலினுள் செலுத்தி வளர்த்து அப்புழுக்கள் இறந்தவுடன் அப்புழுக்களை நசித்து தயாரிக்கப்படும் சாறே பயிர்நிலங்களில் தெளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. சுமார் 300 புழுக்களில் பெறப்படும் சாறானது ஒரு ஏக்கர் பரப்பிற்கு தெளிக்கப் போதுமானது. ஒரு ஏக்கர் பரப்பிற்கு 400l கலவை தேவைப்படுகிறது. இவ் வைரஸ் கிருமிகள் இளம் புழுக்களையும் நடுத்தர வளர்ச்சி கொண்ட புழுக்களையுமே சிறப்பாகக் கட்டுப்படுத்துகின்றது.

**கோப்பிச் செடியில் செதில் பூச்சி**

ஒருவகை செதில் பூச்சி கோப்பிச் செடிகளைத் தாக்கி அவற்றின் சாற்றினை உறிஞ்சி அதன் வளர்ச்சியை பெரிதும் பாதிக்கிறது. இப் பூச்சியின் முதுகுப் பகுதியில் மெழுகு போன்ற படிவங்கள் இருப்பதனால் பூச்சி கொல்லி மருந்துகள் அதன் மேல் படிவதில்லை. இச்செதில் பூச்சிகளை அழிப்பது சிரமம். லெக்கானிசிலியம் லிகேனி எனப்படும் ஒரு வகை பூஞ்சணமானது இவற்றை தாக்கி அழிக்கின்றன. எனவே இப்பங்கசு கரைசலைத் தயாரித்து இப் பூச்சிகளின் மீது தெளிப்பதன் மூலம் இவற்றை இலகுவாகக் கட்டுப்படுத்தலாம்.

**தென்னையில் காண்டாமிருக வண்டை கட்டுப்படுத்தல்**


தென்னை மரத்தில் இளம் இலைகளை அரித்துச் சேதப்படுத்தும் கரியநிற காண்டா மிருக வண்டின் தாக்கமானது சற்று அதிகம். இவ்வண்டுகள் எருக்குவியலில் முட்டைகளை இடுகின்றன. பொரித்து வெளிவரும் குடம்பி, கூட்டுப்புழு பருவங்கள் இவ் எருக்குழிகளிலே நடைபெறுகிறது. ஒருவகைப் பச்சை பூஞ்சணம் இவ் வண்டுகளையும் அதன்



குடம்பிகளையும் தாக்கிக் கொல்வதாக அறியப் பட்டுள்ளது. எனவே எருக் குவியல்களில் இப் பூச்சிகளைத் தெளிப்பதன் மூலம் அல்லது கலப்பதன் மூலம் இவ்வண்டின் தாக்கத்தை கட்டுப்படுத்தலாம். அதுமட்டுமன்றி இலங்கையில் இவ்வண்டுகளின் தாக்கத்தைக் குறைப்பதற்காக ஒருவகை வைரசும் (Baculovirus oryctus) பயன்படுத்தப்படுகிறது.

**மிளகாய், தக்காளி கன்றுகளை நாற்றுமேடையில் பாதுகாத்தல்**

நாற்றுமேடைகளில் மிளகாய் மற்றும் தக்காளி கன்றுகளின் இறப்பு அதிகம். இதற்கு காரணம் Damping off எனப்படும் ஒரு பங்கசுநோய் ஆகும். இந்நோயானது பிதியம் எனப்படும் பங்கசு வர்க்கத்தால் உருவாக்கப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இப்பங்கசுகளுக்கு எதிராக



தாக்கத்தை ஏற்படுத்தும் பங்கசுகளான டிறைக்கோடாமா விரிடே ,டிறைக்கோடாமா ஹாசியானம் என்பன பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை ஆய்வுகூடத்தில் வளர்த்து நாற்றுமேடையில் தெளிப்பதன் மூலம் விதையுடன் கலந்து அல்லது நாற்றுக்கன்றுகளின் வேர்களை நனைத்து பயிரிடுவதன் மூலமும் இதனைக் கட்டுப்படுத்தலாம்.

**க.பகீரதன்**
4ஆம் வருடம்
தகவல் தொடர்பு மையம்
விவசாய பீடம்.

## டைட்டானிக் கப்பலில் பயணித்து மீண்ட பெண்மணியின் ஞாபகார்த்த பொருட்கள் ஏலம்



டைட்டானிக் கப்பலில் பயணித்து மீண்ட இறுதி உயிர் வாழும் பெண்மணியான மில்லினா டீன் மேற்படி கப்பல் பயண ஞாபகார்த்தமாக வைத்திருந்த பொருட்களை ஏலத்தில் விட தீர்மானித்துள்ளார்.தனது மருத்துவ செலவுக்காகவே அவர் இந் நடவடிக்கையை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.தற்போது 96 வயதான மில்லினா டீனுக்கு, 1912 ஆம் ஆண்டு டைட்டானிக் கப்பல் வட அத்திலாந்திக் கடலில் மூழ்கிய போது வயது 9 வாரங்கள் மட்டுமே. இந்நிலையில் மேற்படி மூழ்கிய கப்பலிலிருந்து காப்பாற்றப்பட்டு நியூயோர்க்கை வந்தடைந்த பின் அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒரு பெட்டி நிறைந்த ஆடைகள் உள்ளடங்கலான ஞாபகார்த்தப் பொருட்களை 3000 ஸ்ரேலிங் பவுனுக்கு விற்க அவர் எதிர்பார்த்துள்ளார்.

வில்ஷியரில் நடைபெறவுள்ள இந்த ஏல விற்பனையில், டைட்டானிக் நிவாரண நிதிக்காக மில்லினா டீனின் தாயாரால் அனுப்பப்பட்ட நஷ்டஈடு கோரும் கடிதங்களும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

“நான் என்னுடைய ஞாபகார்த்தமாக பொருடகளை எனது மருத்துவ கட்டணங்களுக்காக விற்கிறேன்.தற்போதுள்ள நிலையில் எனக்குத் தேவையான சிறிது பணத்தைப் பெற எதையும் விற்க நான் தயாராக உள்ளேன்” என்று அவர் கூறினார்.டைட்டானிக் கப்பல் மூழ்கிய போது, மில்லினா டீனும் அவரது தாயாரும் சகோதரரும் காப்பாற்றப்பட்டனர்.

ஆனால் அவரது தந்தையான பெர்ட்ரம் இந்த கப்பல் விபத்து அனர்த்தத்தில் பலியானார். டைட்டானிக் கப்பல் விபத்தில் 1, 500 பேருக்கும் அதிகமானோர் பலியானமை குறிப்பிடத்தக்கது. ஓ

## சர்தாரியின் இல்லமும் அமெரிக்க தூதரகமும் பயங்கரவாதிகளின் இலக்குகள்

### புலனாய்வு முகவர் நிலையங்கள் எச்சரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் ஜனாதிபதி ஆஸிப் அலி சர்தாரியின் இருப்பிடம் மற்றும் அமெரிக்கத் தூதரகம் என்பவற்றை இலக்கு வைத்து பயங்கரவாதிகள் புதிய தாக்குதலை ஆரம்பிக்கக் கூடும் என பாகிஸ்தானிய புலனாய்வு முகவர் நிலையங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

சர்தாரியின் ஜனாதிபதி இல்லம், பாராளுமன்றக் கட்டிடம், அமெரிக்கத் தூதரகம் என்பவற்றின் மீது விரைவில் தாக்குதலை நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக அந் நாட்டு உள்துறை அமைச்சு வட்டாரங்கள் “த நியூஸ் டெய்லி” பத்திரிகைக்கு அளித்த செய்தியில் தெரிவித்துள்ளன.

வடமேற்கு எல்லை மாகாணத்தில் தலிபான்களுக்கும் ஏனைய தீவிரவாதக் குழுக்களுக்கும் எதிரான இராணுவ நடவடிக்கை தொடர்பான பாராளுமன்ற விவாதத்தின் பெறுபேறுகளுக்காக தீவிரவாத குழுக்கள் காத்திருப்பதாகவும், அப்பெறுபேறுகள் பாதகமாக அமையும் பட்சத்தில், இஸ்லாமாபாத்தில் இரண்டாம் கட்ட குண்டுத் தாக்குதல்களை நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக மேற்படி புலனாய்வு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. ஓ

# இந்தியா தூதுக்குழுவை அனுப்பி இலங்கை அரசுடன் பேசவேண்டும்

## –பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் தெரிவிப்பு



(சென்னை)

பாமக நிறுவனர் ராமதாஸ் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை இனி சிங்கள நாடு, சிங்களவர்களுக்கு அடிமையாக வாழ கற்றுக் கொள்ள வேண்டும் இல்லாவிட்டால் தமிழர்களுக்கு இங்கு இடமில்லை என்று இலங்கை போர்ப் படை தளபதி சரத் பொன்சேகா பகிரங்கமாக அறிவித் துள்ளார். இதையே புத்தமத குருக்களும் கூறியுள்ளனர்.

அவர்களின் இந்த பிரகடனம் ஒட்டு மொத்த தமிழினத்துக்கு விடப்பட்ட சவால். தமிழர் உரிமைக்காக போராடும் பிரபாகரன் எங்கள் முன்னால் மண்டியிட வேண்டும் என்று கூறியுள்ளனர். அதற்கு தமிழினத்தை மண்டியிடச் செய்வதுதான் அர்த்தம்.

விடுதலைப்புலிகள் என்ற பூச்சாண்டியைக் காட்டி தமிழர்களின் தன்மானத்தை மழுங்கடிக்க செய்யும் எந்த முயற்சியிலும் யாரும் ஈடுபட வேண்டாம். இது ஒரு இனத்தின் தன்மானப் பிரச்சினை.

இலங்கை தமிழர்களுக்கு அரசியல் தீர்வு ஏற்பட இந்திய அரசை வலியுறுத்த வேண்டும். இந்த முயற்சியில் முதல்வரும் தமிழக அரசும் ஈடுபட வேண்டும். இலங்கை அதிபருடன் நம் பிரதமர் நேரடியாக பேச வேண்டும் இந்தியாவில் இருந்து உயர்மட்ட தூதுக்குழு ஒன்றை அனுப்பி இலங்கை தலைவர்களை சந்தித்து அமைதி பேச்சுவார்த்தை தொடங்கவும் போரை நிறுத்தச் செய்யவும் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டால் இனி அவர்களுக்கு உரிமைகளை பெற்றுத்தர முடியாது இவ்வாறு ராமதாஸ் கூறியுள்ளார். (ஓ-6)

## வன்னிக்குளம் படையினர் வசமாம்

(கொழும்பு)

சீரற்ற காலநிலையையும் பொருட்படுத்தாது படையினர் முன்னேறி வருவதாகவும் புலிகளின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வன்னிக்குளம் கிராமத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் கைப்பற்றியுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பிரதேசம் நான்கு பிரதான பாதைகள் ஒன்றினையும் சந்தியாக அமைந்துள்ளதால் நாச்சிக்குடா , ஜயபுரம் மற்றும் அக்கராயன்குளம் ஆகிய பகுதிகளுக்கு ஆயுதப் பரிமாற்றம் செய்ய புலிகள் இப் பிரதேசத்தை முக்கிய தளமாக பயன்படுத்தி வந்துள்ளனர்.

தமது முன்நகர்வைத் தடுப்பதற்காக புலிகள் மண்திட்டுக்களை அமைத்துள்ள போதிலும் அவை தமக்கு ஒரு சவால் அல்ல எனத் தெரிவித்துள்ள படையினர் தற்போது ஜயபுரம் பகுதிக்குள் ஊடுருவியுள்ளனர். படையினரின் சிறந்த போர் உத்திகள் காரணமாக புலிகளுக்கு பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (சு)

# யாழ்.மருத்துவக் கல்லூரி மாணவர் உட்பட மூவர் கந்தானையில் மோட்டார் சைக்கிள் வாங்கியபின் கைது

## சகோதரி பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணனிடம் புகார்

விடுமுறையில் கொழும்புக்கு வருகை தந்த யாழ் மருத்துவக்கல்லூரி மாணவர்கள் இருவர் கொழும்பில் உள்ள நண்பருடன் கந்தானையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையத்தில் மோட்டார்சைக்கிள் வாங்கி பணம் செலுத்திக் கொண்டிருந்தபோது வர்த்தக நிலையத்தார் கொடுத்த தகவலை அடுத்து மூவரும் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்பபயிற்சி பிரதியமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணனிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

3 ஆம் வருட மருத்துவக்கல்லூரி மாணவர்களான தவராசா கோகுலன் (27), தவேந்திரநாயகம் மதீஸ் (27), இவர்களது நண்பரான தவேந்திரன் ஜெயந்தன் (30) ஆகிய மூவரும் கைதாகி தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக மட்டக்குளியில் வசித்துவரும் இவர்களின் ஒருவரின் சகோதரியான பி. சுபாசினி தெரிவித்தார்.

கடந்த 9ஆம் திகதி கொழும்பில் தமக்குப் பிடித்த சிவப்பு நிற மோட்டார்சைக்கிள் இல்லாமையினால் கந்தானையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையத்திற்கு சென்றதாகவும் தமதுசொந்த தேவைக்கு இவர்கள் மோட்டார் சைக்கிள் வாங்கியதாகவும் பணம் செலுத்திவிட்டு மோட்டார் சைக்கிள் எடுத்துச் செல்லும்போதே கடையில் உள்ளோர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் மூவரையும் கைது செய்து தடுத்துவைத்துள்ளதாக அப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இருவரும் விடுமுறையில் கடந்த ஒரு மாத காலமாக கொழும்பில் தங்கியிருப்பதாகவும் அவர்களின் நண்பரான ஜெயந்தன் தன் சகோதரியுடன் மட்டக்குளியில் தங்கி சாரதியாக தொழில்புரிந்ததாகவும் இவர்களை விடுவித்துத் தருமாறு பிரதிஅமைச்சரிடம் மேற்படி பெண் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதற்கிடையில் சகல ஆவணங்களையும் வைத்திருந்தபோதும் ஏராளமானோர் தமிழர்கள் என்பதனாலேயே கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக பல புகார்கள்பிரதியமைச்சரிடம் கிடைத்துள்ளதாகவும் இவ்விடயம்தொடர்பாக 17 ஆம் திகதி பிரதம மந்திரி தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் தெரிவிக்க இருப்பதாகவும் பெ.இராதா கிருஸ்ணன் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த யூலை 31 ஆம் திகதி தெகிவளையில் வைத்து நீல நிற வானில் கடத்திச்செல்லப்பட்ட 28 வயதுடைய ஆர். இளமாறன் என்ற இளைஞர் மிகுந்த சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கடந்த 11 ஆம் திகதி இரவு நீர்கொழும்பு களனி வீதியில் விடுவிக்கப்பட்டதாகவும் அதேபோல் மோதரையில் வசித்து வரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டு 6மாதங்களாக பூசாவில் தடுத்துவைக்கப்பட்டிருந்தவரான கிளிநொச்சி அடையாள அட்டை வைத்திருந்த பெரியண்ணன் நாகேஸ்வரன் கடந்த 7 ஆம் திகதி 57-3046 இலக்கமுடைய வெள்ளை நிறவானில் கடத்திச்செல்லப்பட்டு 15 ஆம் திகதி இரவு 8 மணிக்கு கண்கள் கட்டப்பட்ட நிலையில் தாக்குதலுக்குள்ளாகி



விடுவிக்கப்பட்டதாகவும் உறவினர்கள் தன்னிடம் புகார் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேபோல் மரண வீட்டுக்குச் சென்ற மட்டக்குளியைச் சேர்ந்த பரமசிவம் ஞானலட்சுமி (58), பரமசிவம் சுபாஷினி (22), அவிசாவளையைச்சேர்ந்த சின்னசாமி சிவந்தினி (25) ஆகிய மூவரையும் கறுவாக்காடு பொலிஸார் சந்தேகத்தில் கைது செய்ததாகவும் தற்போது இவர்கள் மூவரும் எங்குள்ளார்கள் என்று பொலிஸார் தெரிவிக்க மறுப்பதாகவும் பிரதி அமைச்சரிடம் பெற்றோரும் உறவினர்களும் புகார்செய்துள்ளனர். இவர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்று கண்டுபிடித்து உரியவர்களுக்கு அறிவிக்குமாறு பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ணவுக்கு பிரதி அமைச்சர் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். கடந்த மாதம் முதலாம் திகதி வரை பிரதி அமைச்சரிடமும் கடத்தல் மற்றும் காணாமல் போதல் தொடர்பான விசாரணைகளை கண்காணிக்கும் குழுவிடமும் 251 பேர் காணாமல் போயுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறும் கண்காணிப்புக் குழு கூட்டத்தில் விபரம் கோரவிருப்பதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார். (ஓ-6)


## மக்கள் வங்கி அறிவித்தல்

**மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.08.2007ற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.**

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.பிரதான வீதி -104 | | |
| 2 | சேவை நிலையம், உரும்பிராய் | | |
| 3 | சாவகச்சேரி-110 | | |
| 4 | சேவை நிலையம், கொடிகாமம் | | |
| 5 | யாழ். பல்கலைக்கழகம் -162 | | |
| 6 | சேவை நிலையம், திருநெல்வேலி | 2008.12.06 | |
| 7 | யாழ்.கன்னாதிட்டி -284 | 2008.12.07 | |
| 8 | சேவை நிலையம், இணுவில் | 2008.12.13 | |
| 9 | யாழ்.ஸ்ரான்லி வீதி-030 | 2008.12.14 | மக்கள் வங்கி, யாழ்/ கன்னாதிட்டி -284 |
| 10 | சேவை நிலையம்,மானிப்பாய் | 2008.12.15 & | |
| 11 | காங்கேசன்துறை -031 | 2008.12.16 | |
| 12 | சேவை நிலையம்,மல்லாகம் | | |
| 13 | அச்சுவேலி-107 | | |
| 14 | சங்கானை-108 | | |
| 15 | சுன்னாகம்-109 | | |
| 16 | வல்வெட்டித்துறை-141 | | |
| 17 | நெல்லியடி-106 | | |
| 18 | பருத்தித்துறை-285 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**உதவிப் பொதுமுகாமையாளர்**
**வடவலயம்,**

**மக்கள் வங்கி**
**பிரதேச காரியாலயம்**
**கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/1691)


# இந்தியா இலங்கைக்கு இராணுவ உதவி அளிப்பது இந்திய பெருங்கடல் பகுதியில் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தவே

## மத்திய இராணுவ இராஜாங்க அமைச்சர் எம்.எம். பல்லம் ராஜு

(பெங்களூர்)

இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவி அளிப்பது ஏன் என்பது குறித்து இந்திய மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

இலங்கைக்கு இந்தியா அளித்து வரும் இராணுவ உதவியை நிறுத்தக்கோரி முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றஅனைத்துக் கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் பெங்களூருக்கு வந்தமத்திய இராணுவராஜாங்க மந்திரி எம்.எம்.பல்லம் ராஜுவிடம் இந்த தீர்மானம் குறித்து மத்திய அரசின் நிலை என்ன? என்று நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு பதில் அளித்த அவர் மேலும் கூறியதாவது,

இலங்கைக்கு உதவிகளும் தளபாடங்களும் ராடர்களும்இந்தியா வழங்கி உள்ளது.

இவற்றை வழங்குவதற்கான காரணம் இந்திய பெருங்கடல் பகுதியில் இந்தியா ஒரு ஆதிக்க சக்தியாக திகழ்வதை உறுதிப்படுத்துவதற்கு தான். இது நமது போர் சம்பந்தப்பட்ட கொள்கையின் ஒரு அங்கம் ஆகும்.தொடர்ந்து ஆதிக்க சக்தியாக திகழ்வதற்கு இந்த வழிமுறையை பின்பற்றுவோம்.

இலங்கையில் மோதலை அதிகரிக்கும் நோக்கத்தில் இலங்கைக்கு உதவி அளிக்கவில்லை. அங்கு மோதல் குறைவதற்கும் இலங்கை அரசும் தமிழர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை எட்டுவதற்கு ம் இந்தியா பாடுபட்டுவருகிறது. இலங்கையில்தமிழர்களின்மனித உரிமைகள் பற்றி ஒரு நாடு என்ற முறையில் இந்தியா உணர்ந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (ஓ-6)

நல்ல காரியம் எனப்படும் தாய்க்குக் குழந்தைகள் பிறக்காமல் போகாது.

– இங்கர்சால்

வலம்புரி

# ஈழத் தமிழரின் நெடுந்துயரம் தமிழகத்தில் அரசியல் ஆதாயமாகக் கூடாது

ஈழத் தமிழர் படும் நெடுந்துயர் தொடர்பில் தமிழகத்தில் எதிர்ப்பு அலை வீசத் தொடங்கியுள்ளது.

இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தை உடன்நிறுத்துமாறு கோரி தமிழகத்திலுள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம், மறியல் போராட்டம் எனப் பல வகையில் தமது எதிர்ப்புக்களைக் காட்டி வருகின்றனர்.

தமிழகத்தில் திடீரென எழுந்துள்ள இந்த எழுச்சி ஈழத் தமிழர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும் கூடவே உள்ளார்ந்தமான அச்சம் ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது.

அதாவது தமிழகத்தில் எழுந்துள்ள ஈழத் தமிழர் ஆதரவு அலை அரசியல் இலாபம் கருதி ஏற்பட்டுள்ளதா? என்பதே அச்சத்தை ஏற்படுத்தும் விடயமாகும்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா ஒருபுறம், தமிழக முதல்வரும் தி.மு.க.தலைவருமான கலைஞர் கருணாநிதி மறுபுறம், காங்கிரஸார் இன்னோர் புறம் என ஈழத் தமிழருக்கான ஆதரவைக் காட்டி வருகின்றனர்.

கூடவே சர்வகட்சி மாநாட்டை முதல்வர் கருணாநிதி கூட்டி நிலைமையை ஆராய்ந்தார். செல்வி ஜெயலலிதாவின் அறிக்கையுடன் – கருணாநிதியின் சர்வகட்சி மாநாட்டுடன் நடிகர் விஜயகாந்த், சரத்குமார் ஆகியோரும் ஈழத் தமிழருக்கான ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றனர்.

தமிழக மக்கள் தமக்குப் பெரும் துணையாக இருப்பர் என்ற பூரண நம்பிக்கை ஈழத் தமிழரிடம் உண்டு. இருந்தும் ஈழத் தமிழரின் நெடுந்துயரை தமிழக அரசியல்வாதிகள் தமது கட்சிகளின் அரசியல் இலாபத்துக்காக இம்மியும் பயன்படுத்தலாகாது.

நீண்ட காலமாகத் துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழகத்திற்கு வந்ததும் – தமிழகத்தில் அவர்கள் தஞ்சம் புகுந்து பல ஆண்டுகளாக நாடு – தேசமின்றி தமது பண்பாட்டுக் கோலங்களையிழந்து வாழ்வதும் உலகறிந்த உண்மை.

இதேநேரம் தமது தாயகத்தில் வாழ முடியாதென்ற முடிவில் தமிழகத்திற்குக் கடல் வழியாகச் சென்று நடுக்கடலில் தாண்டுபோய் கடற்கரையோரங்களில் காகம் கொத்தும் சடலத் துண்டுகளாகக் கிடந்த சோகம் வேறுகதை.

இத்தகைய துயரத்தில் துவண்டுபோயிருக்கும் ஈழத் தமிழரின் அவல நிலையை தமிழ கம் ஒருபோதும் அரசியல் உழைப்பாக – ஆதாயமாக கருதிச் செயற்படக் கூடாது என்பது தாழ்மையான வேண்டுதல்.

அதேநேரம் தமிழகத்தின் கொதிப்பிற்கு ஈழத் தமிழர் என்றும் நன்றி மறவாதவர்களாக இருப்பார்கள் என்ற உண்மையையும் இவ்விடத்தில் தெரிவிப்பது கட்டாயமானதே.

# மெலமைன் இரசாயனம் கலந்துள்ளதாக காணப்பட்ட 60 வகை தயாரிப்புக்களை மீளப்பெற நடவடிக்கை

## சுகாதார அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் விநியோகிக்கப்படும் பால்மா உற்பத்திப் பொருட்களில் மெலமைன் இரசாயனம் அடங்கி இருப்பதாக பரிசோதனைகளில் இருந்து இனங்காணப்பட்டு இருக்கும் 60 வகையான தயாரிப்புகளை சந்தையில் இருந்து மீளப்பெற சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தல்கள் மாகாண சுகாதார பணிப்பாளர்கள் மற்றும் மாநகரசபை அதிகாரிகளுக்கு சுகாதார சபை பணிப்பாளரினால் விடுக்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்திப் பொருட்களில் மெலமைன் இரசாயனம் அடங்கி இருப்பதாக வெளிநாட்டு ஊடகங்களில் வெளியான தகவல்களை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாக சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் பி. மதுரசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகள் தொடர்பாக கடந்த செம்ரெம்பர் மாதம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை நாட்டில் காணப்படும் அனைத்து உணவு விடுதிகள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளை எதிர்வரும் 20ஆம் 21ஆம் திகதிகளில் விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உணவு விஷமானதன் காரணமாக கடந்த மாதங்களில் பலர் பாதிக்கப்பட்டதாக கிடைத்த முறைப்பாடுகளையடுத்தே இந்த பரிசோதனைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் பல பிரதேசங்களில் பாவனைக்கு உகந்ததல்லாத உணவுப்பொருட்கள் விநியோகிக்கப் படுவதாகவும் சுகாதார அமசின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பொது சுகாதார. பரிசோதகர்கள் மற்றும் சுகாதாரஅதிகாரிகள் உட்பட 2ஆயிரம் பேர் இணைந்து இந்த விசேட பரிசோதனை நடவடிக்கைகளை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை நேற்றில் இருந்து உணவு பாதுகாப்பு வாரம் ஒன்றை நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.(ஓ)

# இலங்கைத் தமிழரை பாதுகாக்க மத்திய அரசு முன்வராவிட்டால் தமிழகம் தனி நாடாகும்

## இடதுசாரி முன்னணியின் இணைப்புச் செயலாளர் சமல்ஜயநித்தி

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் மக்களை பாதுகாப்பதற்கும் யுத்தத்தை நிறுத்தவும் இந்திய மத்திய அரசு தலையிடாவிட்டால் தமிழகம் தனி நாடாகும் பயங்கரநிலை ஏற்படும்.

தமிழக அரசியல் கட்சிகளின் . போராட்டங்களை முழுமையாக அங்கீகரிக்கின்றோம் என இடதுசாரிமுன்னணியின் அமைப்புச் செயலாளர் சமல் ஜயநித்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக சமல் ஜயநித்தி மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தமிழ் மக்களின் போராட்டம் இன்று உத்வேகம் அடைந்துள்ளது. இங்கு தமிழ் மக்கள் கொல்லப்படுவதையும் உரிமைகள் மறுக்கப்படுவதையும் எதிர்த்து தமிழ் நாட்டில் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உண்மையில் தமிழகக் கட்சிகளின் ஒற்றுமை வரவேற்புக் குரியதாகும்.

இந்திய மத்திய அரசாங்கம் இலங்கைக்கு ஆயுதங்கள்த நிதி மற்றும் படையினரின் உதவியையும் வழங்கி தமிழர் கொலைகளுக்கு துணைபோனது.

இன்று தமிழ் நாட்டின் எழுச்சியால் இவையனைத்தையும் நிறுத்த வேண்டிய நிலை மத்திய அரசாங்கத்திற்கு உருவாகியுள்ளது.

எனவேதமிழ் மக்களை பாதுகாத்து யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வை காண மத்திய அரசாங்கம் தலையிடாவிட்டால் இந்திய மத்திய அரசாங்கம் ஆட்டம் காண்பது மட்டுமல்லாது தமிழகம் தனி நாடாக பிரகடனப்படுத்தப்படும்அபாயமும் நிலவுகின்றது.

கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பித்த தமிழ் மக்களுக்கான போராட்டம் தொடர்போராட்டங்களாக மாறியுள்ளன. அரசியல் வாதிகள் -கலைஞர்கள் மாணவர்களென தொடர்கின்றது. எனவே அரசாங்கம் தொடர்ந்தும் யுத்தத்தால் பிரச்சினையை தீர்க்க முயலாது சமஷ்டி முறைமையிலான அரசியலமைப்பை உருவாக்க வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கவேண்டும். வன்னியிலுள்ள மக்கள் அரச கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு வர மறுக்கின்றனர்.

இறந்தாலும் வன்னியிலேயே தங்கத் தீர்மா னித்துள்ளனர்.

எனவே வன்னித் தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பிரித்துப் பார்க்க முடியாது .

உடனடியாக யுத்த நிறுத்தம் பிரகடனப்படுத்தி பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்றும் சமல் ஜெயநித்தி தெரிவித்தார்.

ஓ

# நவம்பர் மாதம் நடைபெறவிருந்த போட்டிகள் அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடத்த தீர்மானம்

## கல்வி அமைச்சின் தமிழ் பிரிவு பணிப்பாளர் இதயராஜா தெரிவிப்பு

(கொழும்பு)

2008 ஆம் ஆண்டிற்கான அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டிகளை தவிர்க்க முடியாத காரணங்களினால் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பிரிவின் பணிப்பாளர் இதயராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவதுஇவ்வாண்டிற்கான அகில இலங்கை தமிழ் மொழித்தினப்போட்டிகளை எதிர்வரும் நவம்பர் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் கொழும்பில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட போதிலும் ஒரு சில தவிர்க ' முடியாத காரணங்களினால் அடுத்த வருடத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை 2008 ஆம் ஆண்டிற்கான மாகாணமட்ட தமிழ் மொழித்தினப்போட்டிகள் இரு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் நடைபெற்று முடிந்துள்ளதாக வும் அவற்றின் முடிவுகள் விரைவில் அமைச்சுக்குக் கிடைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு இப்போட்டிகள் நடைபெறும்உரிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்என்றும் அவர் மேலும் கூறுனார்.

ஓ

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## எண்ணத்தின்ஆதிக்கம்



நம்மிடமிருந்து புறப்படுகின்ற ஒவ்வொரு செயலும் நம்மிடமே எதிர்ச்செயலாகத் திரும்பி வருவது போல் தநம் செயல்கள் பிறரிடமும்த பிறரது செயல்கள் நம்மிடமும் செயல்படுகின்றன. தீமை செய்கின்ற ஒருவன் மேலும் மேலும் தீயவனாகிறான். அவனே நல்லது செய்யத் தொடங்கும் போது மேலும் மேலும் வலிமையடைந்து எப்போதும் நல்லது செய்யக் கற்றுக்கொள்கிறான். இந்த உண்மையை நீங்கள் கவனித்திருப்பீர்கள் . ஒரு செயல் ஏற்படுத்தும் தாக்கத்தின் இத்தகைய தீவிரத்தைத நமது செயல்கள் பரஸ்பரம் ஒவ்வொருவர் மீதும் விளைவுகளையும் எதிர்விளைவுகளையும் உண்டாக் குகின்றன என்ற உண்மையின் மூலம் அல்லாமல்த வேறு எதன் மூலமாகவும் விளக்க முடியாது. பௌதீக விஞ்ஞானத்தில் இருந்தும் இதற்கு ஓர் உதாரணத்தை எடுத்து கொள்வோம். நான் ஒரு குறிப்பிட்ட செயலை செய்யும் போதுத என்மனம் குறிப்பிட்ட ஓர் அதிர்வு நிலையில் இருக்கின்றது. இந்த அதிர்வு நிலையில் இருக்கின்ற மற்றெல்லா மனங்களும் என்மனத்தால் பாதிக்கப்படலாம்.

# இலங்கைத் தமிழருக்கு ஆதரவளிக்கும் வகையில் தமிழகத்தில் விடுதலைச் சிறுத்தைகள் ரயில் மறியல்

(சென்னை)

இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக விடுதலை சிறுத்தைகள் சார்பில் 23ஆம் திகதி ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

இது குறித்து விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

ஈழத் தமிழினம் அழிவதை தடுக்க வலியுறுத்தி தமிழக மக்களிடையே கடந்த சில வாரங்களாக கொந்தளிப்பு நிலவிவருகிறது. அரசியல் கட்சிகள், தமிழ் தேசிய அமைப்புக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், வணிகர்கள், மீனவர்கள் என அனைத்து தரப்பிலும் சிங்கள இனவெறிக்கு எதிரான போராட்டங்கள் வெடித்துள்ளன.

அந்த வரிசையில் இன்று திரையுலகத்தினரும் ராமேஸ்வரத்தில் கண்டன அணி வகுப்பு நடத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. திரையுலகத்தினரின் மனிதநேயம் மற்றும் இனமான உணர்வுகளை விடுதலை சிறுத்தைகள் நெஞ்சார வரவேற்று பாராட்டுகிறது.

ரயில் மறியல் போராட்டம்

ஈழத்தமிழர்களை பாதுகாத்திட இந்திய அரசு உடனடியாக தலையிடும்படி வலியுறுத்தி 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மனித சங்கிலி அறப்போர் சென்னையில் நடைபெறுவதாக முதலமைச்சர் கருணாநிதி அறிவித்துள்ளார். அதில் விடுதலை சிறுத்தைகளும் பங்கேற்பர். தமிழர் சங்கிலி போராட்டம் டெல்லியை அசைப்பதாகவும் கொழும்பை அச்சுறுத்துவதாகவும் பெரும் தாக்கத்தை உருவாக்குவதாகவும் அமைய வேண்டும்.

மேலும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக 23ஆம் திகதி தமிழகம் தழுவிய அளவில் விடுதலை சிறுத்தைகள் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபடும். அன்று தமிழகத்தின் எந்த திசையிலும் தொடர் வண்டிகள் ஓடுவதற்கு விடுதலை சிறுத்தைகள் அனுமதிக்க மாட்டோம் என்பதை தெரிவித்து அப்போராட்டத்திற்கும் தமிழக மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என தொல். திருமாவளவன் கூறியுள்ளார். (இ)

# இலங்கையின் கல்வித்துறை வளர்ச்சிக்கு அவுஸ்திரேலியா நிதியுதவி வழங்குகின்றது

இலங்கையின் கல்வித்துறை வளர்ச்சிக்காக மூன்றாண்டு காலத்திற்கு 4 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கும் திட்டத்தை அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த உதவிகள் யுனிசெப் ஊடாக வழங்கப்படவுள்ளன. இதன் மூலம் இலங்கையின் 600 இற்கு மேற்பட்ட பாடசாலைகள் சார்ந்த கல்வி நடவடிக்கைகளுக்கு உதவி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த நிதியுதவி மூலம் சகல பிள்ளைகளும் தரம் வாய்ந்த ஆரம்பக்கல்வியைப் பெறுவதற்குரிய வசதிகளை விருத்தி செய்யும் நோக்கில் கல்வி அமைச்சும் யுனிசெப் நிறுவனமும் ஆரம்பித்துள்ள சிறுவர் நேயப் பாடசாலைகள் என்ற திட்டத்திற்கு உதவி கள் வழங்கப்படவுள்ளது. இதில் ஓரங்கட்டப்பட்டவர்களும் வழங்கப்பட்டவர்களும் அங்கக் குறைபாடுகளுடன் வாழ்பவர்களுமான பிள்ளைகள் உள்ளடக்கப்படுகின்றனர்.

இலங்கைக்கான பதில் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் சோபியா மெக் இன்டையர் கருத்து தெரிவிக்கையில், இந்த நிதியுதவி இலங்கை பிள்ளைகள் மீது நாம் கொண்டுள்ள கடப்பாட்டை விளக்கும் மற்றுமொரு உதாரணமாகும். இதனால் 250,000 பிள்ளைகள் பயன் பெறுவார்கள் என்று தெரிவித்தார். சிறுவர் நேயப் பாடசாலைகள் கற்றலை விருத்தி செய்து மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிப்பதையும் தொடர்ச்சியாக வருகை தருவதையும் ஊக்குவிக்கும்.

சிறுவர் நேயப் பாடசாலைகள் என்பதன் நோக்கம் தரமான கற்றலுக்கு ஊக்கமளித்து பிள்ளைகள் கல்வி கற்பதற்குரிய ஆரோக்கியமானதும் பாதுகாப்பானதுமான சூழலை உருவாக்குவதாகும்.

இந்தப் பாடசாலைகள் பிள்ளைகள், குடும்பங்கள், சமூகங்கள் ஆகிய சகல தரப்புகளினதும் ஆக்கபூர்வமான பங்குபற்றலை உறுதி செய்யும் என்றார்.

யுனிசெப் ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி பிலிப்பே துவுமெல்லே கருத்து தெரிவிக்கையில், இந்தப் பரோபகாரம் ஆரம்பக் கல்வியின் தரத்தை விருத்தி செய்ய முனையும் இலங்கைக்கு பெரிதும் உதவியாக அமையும். அத்துடன் இந்தத் திட்டத்தின் மூலம் மிகவும் வசதி குறைந்த பிள்ளைகளும் பயன்பெறுவார்கள் இலங்கையைச் சேர்ந்த 1400 பாடசாலைகள் சிறுவர் நேயப் பாடசாலைகள் திட்டத்தில் பங்கேற்றுள்ளன.

இந்தத் திட்டத்தை ஆரம்பக் கல்விக்குரிய தேசிய அணுகுமுறை என்ற ரீதியில் பிரதான நீரோட்டம் நோக்கி நகர்த்தும் கல்வி அமைச்சின் முயற்சிகளுக்கு யுனிசெவ் உதவுகின்றது. (இ)

# கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானுக்கு கிடைத்த முதல் சட்டத் தோல்வி

கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானினால் காத்தான்குடி நகரசபையின் தலைவர் யூ.எல்.எம். முபீன் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டமை சட்டவிரோதமானதென மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த மனு தொடர்பான விசாரணைகள் முடிவடையும் வரை மூபின் நகரசபைத் தலைவராக பதவி வகிக்க முடியும் என மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதவான் பரமராஜா உத்தரவிட்டுள்ளார்.

நகரசபைத் தலைவர் ஒருவரை பதவியிலிருந்து இடைநிறுத்த முன்னர் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரினால் விசாரணை செய்யப்பட வேண்டும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த மனுவிற்கு எதிராக பதில் மனுவொன்றைத் தாக்கல் செய்யுமாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காத்தான்குடி நகரசபைத் தலைவர் மூபின் சார்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் நிசாம் காரியப்பர் ஆகியோர் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# குண்டுகளை தம்வசம் வைத்திருந்த இராணுவ அதிகாரி கைது

விமானங்களை தாக்கி அழிக்கக்கூடிய குண்டுகளை தம்வசம் வைத்திருந்த முன்னாள் உயர் இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். மத்துகம பிரதேசத்தில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விமானங்களைத் தாக்கி அழிக்கக் கூடிய ஐந்து குண்டுகள் மற்றும் குண்டுகளை வெடிக்கச் செய்யும் வயர்கள் போன்றவற்றை குறித்த இராணுவ அதிகாரி வைத்திருந்ததாகப் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

குறித்த முன்னாள் இராணுவ அதிகாரியிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்துகம பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். (இ)

# இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்துமாறு நடிகர் நடிகைகளும் உண்ணாவிரதப் போராட்டம்

## முன்னணி நடிகர்களான ரஜனி, கமல் பங்கேற்பு



ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசின் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையிலும் இலங்கைக்கான இந்தியாவின் இராணுவ உதவிகளை நிறுத்தக் கோரியும் நடிகர், நடிகைகள் எதிர்வரும் 1ஆம் திகதி உண்ணா விரதப் போராட்டத்தினை நடத்த வுள்ளனர்.

இந்த உண்ணாவிரதத்தில் ரஜனி, கமல் உள்ளிட்ட அனைத்து முன்னணி நடிகர், நடிகைகளும் பங்கேற்கவுள்ளனர் எனவும் நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் கடும் சண்டை நடந்து வருகிறது.

புலிகளின் ஆதிக்கத்தில் உள்ள கிளிநொச்சியைப் பிடிக்க அப்பாவித் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை அப்பகுதியிலிருந்தே வெளியேற்றி வருகின்றது இலங்கை இராணுவம். ஏராளமான தமிழர்கள் இதில் பலியாகி வருகின்றனர்.

இது தவிர, இந்திய- இலங்கை கடல் பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களையும் தாக்கி வருகிறது இலங்கை கடற்படை.

இந்தப் போக்கைக் கண்டிக்கும் வகையிலும் இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவின் இராணுவ உதவிகளை உடனடியாக நிறுத்தக் கோரியும் தமிழ்த்திரையுலகம் சார்பில் இராமேஸ்வரத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை கண்டனப் பேரணி, ஆர்ப்பாட்டம் மற்றும் பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக இயக்குநர் பாரதிராஜா, ராம நாராயணன், நடிகர் சரத்குமார் தலைமையில் தமிழ் இன உணர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தில் திரையுலகின் அனைத்துப் பிரிவு சங்கங்களும் பங்கேற்றாலும் நடிகர் சங்கம் பங்கேற்பதில் உள்ள கஷ்டம் குறித்து சரத்குமார் சில



கேள்விகளை எழுப்பியிருந்தார்.

ஆனால், பின்னர் அவரை பாரதிராஜாவும் ராமநாராயணனும் சமாதானப்படுத்தினர். அவரும் இராமேஸ்வரம் வருவதாக ஒப்புக் கொண்டார். ஆனால், இராமேஸ்வரம் செல்ல நடிகர், நடிகைகள் எதிர்ப்பு தெரிவித்தனர். பாதுகாப்பு, தங்கும் வசதி என பல பிரச்சினைகள் இருப்பதால் சென்னையிலேயே போராட்டம் நடத்துமாறு அவர்கள் கேட்டுக் கொண்டனர். (இ)

## மூளாய் வைத்தியசாலையில் இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையின் ஊழியர்களும் நலன்விரும்பிகளும் இணைந்து நாளைப் பிற்பகல் ஒருமணிக்கு இரத்ததானம் செய்யவுள்ளனர்.

இந்நிகழ்வில் இரத்ததானம் செய்யவிரும்பும் குருதிக் கொடையாளர் களை வைத்தியசாலைக்கு சமூகம் தருமாறு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுள்ளார். (சு)

## பலாலி ஆசிரியர் கலாசாலை இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலையின் முதலாம், 2ஆம் வருட இறுதிப்பரீட்சை நடைபெறவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே கடந்த காலங்களில் பயிற்சிபெற்று மேற்படி பரீட்சைக்குத் தோற்றி நான சித்தி பெற்ற மாணவர்களை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னதாக அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு பலாலி ஆசிரியர் கலா சாலையின் அதிபர் அறிவித்துள்ளார். (இ)

## அல்லைப்பிட்டி மக்களுக்கு விதை நெல் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான விதை நெல் மற்றும் உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

யு.என்.டி.பி., விவசாயத்திணைக்களம், கமநல சேவை நிலையம் என்பன இணைந்து, தெரிவு செய்யப்பட்ட 25 பயனாளிகளுக்கு இப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

விவசாய உள்ளீடுகள் வழங்கும் இந் நிகழ்வில், கமநல சேவைநிலையத்தைச் சேர்ந்த பற்றிக் நிரஞ்சன், யாழ்.விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சிவகுமார்; யு.என்.டி.பி பணிப்பாளர் நிஷாந்தன், வேலணை விவசாயப் போதனாசிரியர் செ.இராமநாதன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (சு)

# கிரிக்கெட் 'கிங்' சச்சின் டெண்டுல்கர் 12 ஆயிரம் ஓட்டங்கள் குவித்தார்



## டெஸ்ட் அரங்கில் மற்றொரு புதிய சாதனை

டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்கள் எடுத்துச் சாதனை படைத்தார் இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர். டெஸ்ட் அரங்கில் 12 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற பெருமையையும் டெண்டுல்கர் பெற்றார்.

இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 2-வது டெஸ்ட் நேற்று மொகாலியில் ஆரம்பமானது. இதில் இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் 15 ஓட்டங்களை எடுத்தபோது மேற்கிந்தியத் தீவுகள் முன்னாள் அணித் தலைவர் பிரைன் லாராவினால் நீண்ட காலம் காப்பாற்றப்பட்ட டெஸ்ட் கிரிக்கெட்டின் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற சாதனையை முறியடித்தார்.

டெஸ்ட் அரங்கில் 1990 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை 131 போட்டிகளில் விளையாடியுள்ள பிரைன் லாரா 11 ஆயிரத்து 953 ஓட்டங்களை எடுத்து அதிக ஓட்டங்களை எடுத்த வீரர் என்ற சாதனையைத் தக்க வைத்திருந்தார்.

அச் சாதனையை நேற்றுத் தனது 152 -வது டெஸ்டில் ஆடிய சச்சின் டெண்டுல்கர் முறியடித்தார். அத்துடன் டெஸ்ட் போட்டிகளில் 12 ஆயிரம் ஓட்டங்களை எடுத்துப் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

சச்சின் டெண்டுல்கர் நேற்று 88 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்த நிலையில் இது வரை டெஸ்டில் 12 ஆயிரத்து 27 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

**டெஸ்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த ஏழு வீரர்கள்**

டெண்டுல்கர் (இந்தியா 1989-2008) 152 போட்டிகளில் 247 இன்னிங்சுகளில் 12 ஆயிரத்து 27 ஓட்டங்கள் (சராசரி 54.17), பிரைன் லாரா (மேற்கிந்தியத் தீவுகள் 1990-2006) 131 போட்டிகளில் 232 இன்னிங்சுகளில் 11 ஆயிரத்து 953 ஓட்டங்கள் (சராசரி 52.88),

அலன் போடர் (ஆஸி. 1978-1994) 156 போட்டிகளில் 265 இன்னிங்சுகளில் 11 ஆயிரத்து 174 ஓட்டங்கள் (சராசரி 50.56), ஸ்டீவ் வோ (ஆஸி. 1985-2004) 168 போட்டிகளில் 260 இன்னிங்சுகளில் 10 ஆயிரத்து 927 ஓட்டங்கள் (சராசரி 51.06),

ராகுல் ராவிட் (இந்தியா 1996-2008) 127 போட்டிகளில் 219 இன்னிங்சுகளில் 10 ஆயிரத்து 341 ஓட்டங்கள் (சராசரி 53.58), ரிக்கி பொன்டிங் (ஆஸி.) 121 போட்டிகளில் 201 இன்னிங்சுகளில் 10 ஆயிரத்து 239 ஓட்டங்கள் (சராசரி 58.50),

**லாரா பாராட்டு**

தனது சாதனையை முறியடித்த சச்சினுக்கு முதல் ஆளாக வாழ்த்துத் தெரிவித்திருக்கின்றார் மேற்கிந்தியத் தீவுகள் வீரர் லாரா. இது குறித்து அவர் கூறுகையில்,

சாதனைகள் முறியடிப்பதற்குத்தான். எனது சாதனையை சச்சின் முறியடித்தது மகிழ்ச்சியளிக்கின்றது என்றார்.

**என்னை நோக்கி எறிந்த கற்களை மைல் கற்களாக மாற்றினேன்**

உலக சாதனை படைத்து உற்சாகத்தில் இருக்கும் சச்சின் விமர்சகர்களுக்குச் சரியான பதிலடி கொடுத்துள்ளார். தன் மீது எறிந்த கற்கலை மைல் கற்களாக மாற்றியிருப்பதாகக் கூறியுள்ளார்.

இது குறித்து சச்சின் கூறியதாவது, எனக்குச் சாதனைகள் முக்கியமல்ல. ஆனாலும் என்னைச் சந்திப்பவர்கள் எல்லாம் சாதனையைப் பற்றித்தான் நினைவுபடுத்தினர்.

லாராவின் சாதனையை முறியடிக்க 15 ஓட்டங்கள்தான் வேண்டும் என்பது எனக்கும் தெரியும். இதற்கு முக்கியத்துவம் அளிக்காமல் மிகுந்த கவனத்துடன் ஆடினேன்.

டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்கள் எடுத்தது எனது 19 ஆண்டு கால கிரிக்கெட் வாழ்க்கையின் மிகப் பெரும் சாதனையாக அமைந்தது. இது ஒரே இரவில் நடக்கவில்லை. இந்தக் காலகட்டத்தில் ஏற்றம், இறக்கங்களைச் சந்தித்துள்ளேன்.

என்னை நோக்கி விமர்சனக் கற்களை எறிந்துள்ளனர். இதனைத் தற்போது மைல் கற்களாக மாற்றிக் காட்டியுள்ளேன். சாதனைகள் முறியடிப்பதற்குத்தான். நான் 16 வயதில் இளம் வீரராகக் கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்த போது சாதனை பற்றி நினைக்கவில்லை. எந்த இலக்கையும் நிர்ணயித்துக் கொள்ளவில்லை.

எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று தெரியாது. சாதனை பற்றி எண்ணாமல் இன்னொரு 16 வயது வீரர் கூட அறிமுகம் ஆகலாம். சௌரவ் கங்குலியும் நானும் நிலைத்து நின்று விளையாட முடிவு செய்தோம்.

2 ஆம் நாள் தொடர்ந்து விளையாட வேண்டும் என நினைத்தேன். ஆனால் 88 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது மிகுந்த ஏமாற்றம் அளித்தது. இவ்வாறு சச்சின் கூறினார்.


# இரண்டாவது டெஸ்ட்

## சச்சின், கங்குலி சிறப்பான இணைப்பாட்டம் இந்திய அணி வலுவான நிலையில்

(மொகாலி)

டெண்டுல்கர், கங்குலியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இரண்டாவது டெஸ்டில் முதல் நாள் ஆட்ட நேர முடிபில் இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களையிழந்து311 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 4 போட்டிகள் கொண்ட போர்டர்-கவாஸ்கர் கிண்ணத்துக்கான டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.



இத் தொடரின் முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிபடைய இரு அணிகளும் தொடரில் சம நிலையிலுள்ளன. இந் நிலையில் தொடரின் 2-வது டெஸ்ட் நேற்று மொகாலியில் ஆரம்பமானது.

இதில் இந்திய அணித் தலைவர் கும்ளே காயம் காரணமாக ஆடாத நிலையில் தோனி அணித் தலைவராகப் பொறுப்பேற்றார். இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன் அடிப்படையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய காம்பீர் - சேவாக் ஜோடி நல்ல ஆரம்பத்தை வழங்கினர். அந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 70ஓட்டங்களை எடுத்தபோது அதிரடி வீரர் சேவாக் (6 பவுண்டரிகள் உட்பட) 35 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய ராவிட்டும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை எடுத்தார். மறுமுனையில் சிறப்பாக ஆடிய காம்பீர் அரைச் சதம் கடந்து அசத்தினார்.

இந்த ஜோடி 2-வது விக்கெட்டுக்காக 76 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது ராவிட் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 3-வது விக்கெட்டுக்காகக் களமிறங்கிய டெண்டுல்கர், காம்பீருடன் இணைந்து சிறப்பாக ஆடி ஓட்டங்களை எடுத்தார்.

மறுமுனையில் ஆரம்பம் முதல் நிதானமாக ஆடிய காம்பீர் (9 பவுண்டரிகள் உட்பட) 67 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து டெண்டுல்கருடன் இணைந்த லக்ஷ்மன் 12 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய கங்குலி நிதானமாக ஆட மறுமுனையில் டெண்டுல்கர் 15 ஓட்டங்களை எடுத்தபோது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக ஓட்டங்களை எடுத்த மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் அணித் தலைவர் பிறைன் லாராவின் சாதனையை முறியடித்தார்.

தொடர்ந்து சிறப்பாக ஆடிய டெண்டுல்கர்-கங்குலி ஜோடி ஓட்டங்களைக் குவித்து இந்திய அணியை வலுவான நிலைக்குக் கொண்டு சென்றது.


நீண்ட இடைவெளிக்குப் பின் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய டெண்டுல்கர் அரைச் சதம் கடந்தார். மறுமுனையில் கங்குலியும் அரைச் சதம் கடந்து அசத்த இந்திய அணி 300 ஓட்டங்களைக் கடந்தது.

இந்த ஜோடி 5-வது விக்கெட்டுக்காக 142 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது 40- வது டெஸ்ட் சதம் பெறுவார் என எதிர்பார்த்த டெண்டுல்கர் 88 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து இசாந்த் சர்மா களமிறங்கினார். இந் நிலையில் நேற்றைய முதல்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட போது இந்திய அணி தன் முதலாவது இன்னிங்சில் 5விக்கெட்டுக்களையிழந்து 311 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் சௌரவ் கங்குலி 54 ஓட்டங்களுடனும் இசாந்த் சர்மா 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழகாமல் இருந்தனர். பந்துவீச்சில் ஜோன்ஸன் மூன்று விக்கெட்டுக்களையும் பிரெட் லீ, ஷிட்டில் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர். போட்டியின் 2 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# பங்களாதேஷ் அணி நிதானமான ஆட்டம்



(சிற்றங்கோங்)

ஹீசைன்-றகீமின் நிதானமான ஆட்டத்தின் மூலம் முதலாவது டெஸ்டில் முதல் நாள் ஆட்ட நேர முடிபில் பங்களாதேஷ் அணி அதன் முதலாவது இன்னிங்சில் 4 விக்கெட்டுக்களையிழந்து 183 ஓட்டங்களை எடுத்தது.

பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 ஒரு நாள் போட்டி, 2 டெஸ்ட் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் நியூசிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றுள்ள நிலையில் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது போட்டி நேற்று சிற்றிங்கோமில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி ஹீசைன்,றகீமின் 143 ஓட்டங்கள் இணைப்பாட்டத்தின் மூலம் நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிபில் 4 விக்கெட்டுக்களையிழந்து 183 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ஹீசைன் 79 ஓட்டங்களுடனும் றகீம் 59 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். முன்னதாக இக்பால் 18, சிற்றிக் 0, சாலி 20, அணித் தலைவர் அஷ்ரப்புல் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

• பந்து வீச்சில் ஓப்றின், விக்டோறி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

சபை, யாழ்ப்பாணம்.



## தமிழ் இலக்கிய விழாவில் விருது பெறவுள்ளோருக்கு

(யாழ்ப்பாணம்)

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரினால் அனுப்பப்பட்ட 15.10.2008 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைய இவ் வருடத்திற்கான தமிழ் இலக்கிய விழா எதிர்வரும் ஒக்டோபர் 24, 25ஆம் திகதிகளில் மன்னார் நகரில் நடாத்தப்படவுள்ளது. இந் நிகழ்விற்கு கப்பலில் பிரயாணம் செய்யும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த,விருது பெறும் கலை ஞர்கள் மற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் தமக்கான பயண ஒழுங்குகளைச் செய்வதற்காக மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபருடன் அல்லது திட்டப்பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

(சு)

## அம்பாந்தோட்டையில் தாக்குதல்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள யால-2 வனப்பகுதியில் இராணுவத்தினருக்கும் அடையாளம் தெரியாத ஆயுததாரிகளுக்கும் இடையில் நீண்ட நேரம் இடம்பெற்ற கடுமையான மோதலில் இராணுவதரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் பலர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யால-2 வனப்பகுதியில் உள்ள மாணிக்க கங்கையிலிருந்து திஸ்ஸமகராகம பக்கமாக செல்லும் கடற்கரை வீதிப்பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இராணுவத்தினருக்கும் அடையாளம் தெரியாத ஆயுததாரிகளுக்கும் இடையில் கடுமையான மோதல் இடம்பெற்றது.

நீண்ட நேரம் இடம்பெற்ற இம் மோதலில் சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

பல இராணுவத்தினர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(சு-5)

## இந்தியாவின்...

கட்சியின் நிலைப்பாடு அல்ல எனவும் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அறிக்கைளை வெளியிடும் அதிகாரம் லக்ஸ்மன் செனவிரத்னவுக்கு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(சு-5)

## தி.மு.க. எம்.பிக்கள்...

பதவியை ராஜினாமா செய்வர் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மறுநாளே முதல்வரின் மகளும், ராஜ்ய சபா எம்.பியுமான கனிமொழி, தன் எம்.பி.பதவியை ராஜினாமா செய்து, கடிதத்தை முதல்வர் கருணாநிதியிடம் சமர்பித்தார்.

இதைத் தொடர்ந்து, ராஜ்யசபாவில் தி.மு.க சார்பில் இடம் பெற்றுள்ள திருச்சி சிவா, ஜின்னா, வசந்தி ஸ்டான்லி ஆகிய மூவரும் 29ஆம் திகதியிட்ட தங்கள் ராஜினாமா கடிதத்தை முதல்வர் கருணாநிதியிடம் அளித்துள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து மத்திய அமைச்சர்கள் பாலு, ராஜா உட்பட 14 லோக்சபா எம்.பிக்கள் தங்கள் ராஜினாமா கடிதங்களை முதல்வர் கருணாநிதியிடம் நேற்று கொடுத்தனர்.

தி.மு.க.,சார்பில், லோக்சபா மற்றும் ராஜ்ய சபாவில் இடம்பெற்றுள்ள எம்.பிக்கள் கூண் டோடு தங்கள் ராஜினாமா கடிதத்தை முதல்வர் கருணாநிதியிடம் அளித்துள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

(சு-5)

## தமிழர்களுக்கு...

ளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் தன்னா லான அனைத்து ஏற்பாடுகளையும் மேற் கொண்டு வருகிறது.

இவ்வாறு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு அரசாங்கத்தினால் அனுப்பப்படும் பொருட்களுள் 70 வீதமானதை புலிகள் அபகரித்துக் கொள்வதை அறிந்த போதும் உணவு விநியோகத்தை அரசாங்கம் நிறுத்தவில்லை.

வடக்கில் உள்ள எமது சகோதர சகோதரிகள் எதிர்நோக்கும் சகல நெருக்கடிகளும் தற்காலிகமானவை அவற்றுக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும்.

புலிகள் ஆயுதங்களை கீழே வைத்து விட்டு படையினரிடம் சரணடைந்து ஜனநாயக நீரோட்டத்துக்கு வர வேண்டும். சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவினூடாக தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்கும் முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப் படும்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களை புலிகளிடமிருந்து நாம் விரைவில் கைப்பற்றுவோம்.

வடக்கு தமிழ்மக்களின் எதிர்காலத்தை ஜனநாயக ரீதியில் அவர்களே தீர்மானிப்பார்கள் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

(சு-5)

## ஜனாதிபதி...

அது குறித்து சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவிக்கவேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் பணிப்புரை வழங்கியிருந்தது.

இதற்கமைய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும்,எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த வாரம் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியிருந்ததுடன், அரசியலமைப்புச் சபை நியமனம் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கும் இணக்கம் கண்டிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பிரதமருடன் கலந்துரையாட ஜனாதிபதி இணங்கியிருப்பதாக பதில் சட்டமா அதிபர் நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்திடம் அறிவித்தார்.

அரசியலமைப்புச் சபை நியமிக்கப்படாமலிருப்பது அடிப்படை உரிமையை மீறும் வகையில் அமைந்திருப்பதாகக் கூறி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களில் ஜனாதிபதி, சபாநாயகர், பிரதமர்,எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (சு-5)

## உணவு லொறிகள்...

செல்வது தொடர்பாக இலங்கை அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளுடன் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தி, இரண்டு தரப்பினரிடமிருந்தும் உணவுப் பொருள்கள் ஏற்றிய லொறிகளை அனுப்பி வைப்பதற்கான பாதுகாப்பு உத்தர வாதத்தை பெற்றுக் கொண்டதாகவும் அவர் கூறினார்.

இதற்கமைய, ஐக்கிய நாடுகளுக்குச் சொந்தமான 5 லொறிகள் 9 உதவி வாகனங்களுடன் நேற்று காலை புறப்பட்டுச் சென்றதாக கோர்டன் வெய்ஸ் தெரிவித்தார்.

இந்த லொறிகளில் 750 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் வன்னியில் இடம்பெயர்ந்த சுமார் 2 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வழங்குவதற்காக அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தொடர்ந்து வன்னிக்கு உணவு லொறிகள் அனுப்பி வைக்கப்படும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.திவாரத்ன தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் 100 லொறிகளை வன்னிக்கு அனுப்ப தாம் தீர்மானித்திருப்பதாகவும் வன்னியில் தேவையான உணவுப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதே தமது திட்டம் என்றும் அவர் கூறினார்.

(சு-5)

## இலங்கையில் அரசியல்...

வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விபரம்வருமாறு; இலங்கையின் தற்போதைய நிலைமை இந்தியாவின் மிகுந்த அக்கறைக்குரிய ஒரு விடயமாக தொடர்ந்து இருந்து வருகிறது.

தாம் உருவாக்காத ஒரு சூழ்நிலைக்குள் சிக்குண்டிருக்கும் பொதுமக்கள் தொடரும் மோதல்களால் மனிதாபிமான பாதிப்புக்களுக்கு உட்பட்டிருப்பது குறித்து நாம் குறிப்பாக கவலையடைந்துள்ளோம்.

அவர்களது உரிமைகள் மதிக்கப்பட்டு தாக்குதல்களில் இருந்து அவர்கள் பாதுகாக்கப்படுவதுடன் உணவும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களும் அவர்களைச் சென்றடைய அனுமதிக்கப்பட வேண்டும்.

இராணுவ வழிமுறைகளின் மூலமோ, யுத்தகள வெற்றிகளின் மூலமோ இயல்பு நிலைமைக்கு திரும்ப முடியாது என்பதை நாம் தொடர்ச்சியாக தெளிவு படுத்தி வருகிறோம். ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் ஒவ்வொரு சமூகமும் தனது அடையாளத்தை உணரக் கூடிய வகையில் பேச்சுவார்த்தை மூலமான ஒரு சமாதானத் தீர்வே இலங்கைக்கு இப்போது தேவையானது.

இலங்கையில் மனிதாபிமான நிலைமைகளை முன்னேற்றி இந்த இலக்கை அடைவதற்கு இலங்கை அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களிலும் தனது பிரதிநிதித்துவத்தை தொடர்ச்சியாக மேற்கொண்டு, தனது சக்திக்குட்பட்ட அனைத்து விடயங்களையும் இந்திய அரசாங்கம் செய்யும்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலை அண்மித்த பகுதிகளில் துன்புறுத்தப்படுவது மற்றும் கொல்லப்படுவ்து குறித்தும் இந்திய அரசாங்கம் கவனம் செலுத்தி அவற்றை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்கும் என்றுள்ளது.

இதேவேளை இந்திய வெளியுறவுச் செயலர் சிவசங்கர் மேனன் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் குணசிங்கவை தமது அலுவலகத்துக்கு அழைத்து இலங்கை நிலைவரம் குறித்து இந்தியாவின் கவலைகளை தெரியப்படுத்தியுள்ளார்.

நேற்று நடந்த இந்த சந்திப்பின்போது இந்த விவகாரத்தில் இந்தியாவின் கவலைகளை போக்கத்தக்க முறையான நடவடிக்கைகளை இலங்கை எடுக்க வேண்டுமென சிவசங்கர் மேனன் கோரியதாக இந்திய வெளியுறவு அமைச்சக வட்டர்ரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் தொடரும் மோதல்களின் காரணமாக இதில் சம்பந்தப்படாத பொதுமக்கள் சந்திக்கும் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் வியாழனன்று தெரிவித்திருந்த பின்னணியில் நேற்றைய இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

(சு)

## சீரற்ற கால...

பில் தகவல் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் தொடர்ந்தும் கூறியதாவது, வன்னிக் களமுனைகளில் இடம் பெற்றுவரும் மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்துள்ள பொதுமக்கள் சீரற்ற காலநிலை காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பாம்புக்கடி, வெள்ளப்பெருக்கு,சுகாதார வசதியின்மை போன்ற காரணங்களால் சிறுவர், பெரியவர்கள் உட்பட பலரும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து பாதுகாக்கும் பொருட்டே அவர்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருமாறு அழைப்பு விடுத்தோம்.

இவ்வாறு அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தவர்கள் வவுனியா மற்றும் மன்னார் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் பாதுகாப்பு தரப்பினரால் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தை முழுமையாகக் கைப்பற்றும் நோக்கில் படையினரால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களின் போது பொதுமக்கள் பாதிக்கப்படுவதாக பல்வேறு ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இத்தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என்றார்.

(எ-5)

Hatton National Bank

அடகுப் பொருட்களை ஏல விற்பனைக்கான

அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 31.07.2007 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 25.10.2008 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியா விட்டால்...

❖ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

*அல்லது*

❖ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகு பொருட்களை மீள அடகு வைத்துக் காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்குண்டு.

-ஹற்றன் நஷனல் வங்கி (C-1692)

ஏசியன் கூலேஸ் திறப்பு விழா

எமது நிறுவனம் இன்று 18.10.2008 சனிக்கிழமை சுபவேளை காலை10.32 மணி தொடக்கம் தனது சேவையினை ஆரம்பிக்கின்றது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருவதில் நாம் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது சேவைகள்:

◆Refrigerator (Fridge), Deep Freezer Repairs & Painting.
◆AC Installation, Maintenance & Repairs.
◆Vehicle AC Repairs.
◆Electrical Wiring Installation & Repairs.
◆Washing Machine Repairs.
◆Plumbing Work.

ASIAN COOLERS,
MOOLAI ROAD, VADDUKODDAI.
T.P:-0774745686

ஏசியன் கூலேஸ்,
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.
T.P:-0779819610

(C-1693)